உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰உ. { தாது, தை } மலர் ௰

RECEIVED
11 FEB 1937
TANJORE

க. கல்லாட நூலாராய்ச்சி 347
திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L.,

உ. நற்றிணை 355
திரு. வித்துவான். ச. தண்டபாணி தேசிகரவர்கள்

ஈ. தமிழ்க் கவிச் சுவை 360
திரு. வித்துவான். வீ. குமாரசாமி ஐயரவர்கள்

ச. நெடுந்தொகைக் குறும்பொருள் 364
திரு. வித்துவான்.
முத்து. சு. மாணிக்கவாசகமுதலியாரவர்கள்

ரு. அகவல்பாவின் ஆய்வு 373
திரு. வே. மு. சீனிவாச முதலியாரவர்கள்

சூ. வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி 382
திரு. சிவ. குப்புசாமிப்பிள்ளையவர்கள்

எ. மதிப்புரை 385
பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௧௨ | தாது, தை | மலர் ௰ |

உ

## கல்லாட நூலாராய்ச்சி

திருவாளர். E. R. நாசிம்மஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 9, பக்கம் 323)

இறையனருரை, சங்ககாலத்திற்குப்பின் 8-ம் நூண்டில் இயற்றப்பட்டதாகும்; கிளை முறையாக 35 பெயர்களால் ஓதப் பட்டு வந்ததாக உரைகாரர் கூறியிருப்பின் இவ்வுரை நக்கீரர் உரையாகுமெனக் கொள்ளத்தகும். 13 பெயர்களே உரைகாரர் கூறியுள்ளார். இக்கூற்றை ஆராய்ச்சியாளர் கொள்ளார். எனவே நக்கீரர் உரையென்பது கற்பனையாகும்; இக்கற்பனையை உரைகாரர் கூற்றெனக்கொள்க. இந்நூலாசிரியர் இறையனர் என்பவர். இப்புலவர் "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் குறுந்தொகைச் செய்யுளை இயற்றியவர். இப்புலவர் ஊனுடம் பொடு பிறந்தவரேயன்றி பிறவாயாக்கைப்பெரியோனல்லர். இப்

புலவர் பெயர் ஈசன் பெயரோடு ஒரொற்றுமைப் படுவதைக் கருதி இந்நூல் ஈசனே இயற்றியதென்றும் களவியலுரைகாரர் கற்பித்துவிட்டார். இதனைப் பின்னோரும் பின்பற்றி வேறு கதைகளும் புணர்த்தார்.

இறையனாருரைகாரர் கருத்தையறிந்த மற்றோர் புலவர் ஈசனார் பாடிக்கொடுத்த செய்யுளில் நக்கீரர் குற்றங் காட்டினாரென்று ஓர் கதையைப் புணர்த்து நக்கீரர் பெயரால் சில நூல்களைப்பாடி இறையனாருரைகாரர் கூறிய கதையை வளம்பெறச் செய்தார். இக்கதைக்கு "நன்பாட்டுப் புலவனாகிச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்" என்று நாவுக்கரையர் பாடியுள்ள பழைய வரலாறொன்றை ஆதரவாகக்கொண்டு, நக்கீரர் குற்றங்காட்ட, ஈசனார் நக்கீரன்மாட்டு சினமுடையவராய் நெற்றிக் கண்ணால் நோக்க, நக்கீரன் விழிக்கனலின் வெப்புக் காற்றாகி, ஓர் வாவி நீருட்புக் கிருந்தவாறே ஈசனைப்பாடி அருள்பெற்றுய்ந்தான் என்று இப்புலவர் கற்பித்தார். இக் கதை புணர்த்தவர் ஈசனார் பாடிய செய்யுளைக்கூறாது விடுத்தது குறிக்கத்தக்கது.

இக்கதையைப் புணர்த்த புலவர் தாம் பாடிய பாட்டுக் களுக்கு நக்கீரர் பெயரைச் சூட்டியது போலவே வேறு சில செய்யுட்கள்பாடி அவற்றிற்கு மற்றை சங்கப்புலவரான கபிலர், பரணர், கல்லாடர் முதலியோர் பெயரையும் சூட்டினார்போலும். இப்பாட்டுக்களனைத்தும் பதினொன்றாம் திருமுறையில் சேர்க் கப்பட்டுள்ளன. இவைகள் நடையானும் இலக்கணக் குறிப்புக் களானும் தேவாரப் பதிகங்களுக்கும் முந்தியவையாகாவெனக் கூறலாகும். இறையனாருரையை இப்புலவர் பின்பற்றினாரென வுங் கூறலாமாகலான் இப்புலவர் 8-ம் நூற்றாண்டிற்கும் முற் பட்டவராகார். "நுணலுந் தன் வாயாற்கெடும்" என்பதற்கு இப்புலவர் பாடிய திருவெழுக் கூற்றிருக்கையில் "நால்வகை, இலக்கணம் நலத்தக மொழிந்தனை" என்னும் கூற்றே இலக் காகும் என்பதனைக் காட்டுவாம்.

தொல்காப்பியருக்கு முன்னர் இலக்கணம் எழுத்தும்பொரு ளும் என்னும் இருவகைப்பாகுபாடே இருந்ததென்பர். தொல்

காப்பியர் எழுத்து, சொல், பொருள் என்றும் மூவகைப் பாகுபாட்டைக் கொண்டனர். பல்காயனர், பல்காப்பியனர் முதலியோர் செய்யுளியலைத் தனியே பிரித்து யாப்பு என்னும் ஓர் அதிகாரம் ஆக்கினரெனக் கூறலாம். இவர்களில் பதின்மருக்கு மேல் யாப்பு நூல்கள் யாத்தனர் என்பது யாப்பருங்கல விருத்தியால் உணரலாகும். இறையனருரைகாரர் எழுத்து, சொல், பொருள், யாப்பு என நால்வகைப் பாகுபாட்டைக் கூறியுள்ளார். நால்வகைப் பாகுபாடு இறையனர் உரைகாரர் காலத்திற்கு முற்பட்டதாகும். திருவெழுகூற்றிருக்கையின் ஆசிரியர் இறையனருரைகாரருக்கும் பிற்பட்டவரென்று முன்னர் கூறினமாகலின் இறையனருரை காலத்திற்குப் பின்னும் நால்வகைப் பாடே வழங்கியதாகும். பிங்கலந்தையாசிரியர் இலக்கணத்தின் ஐவகைப் பாகுபாட்டை, கவியரங்கேற்றிய பாட்டுடைத் தலைவன் செய்யும் வழிபாடு கூறுமிடத்து

"உருவக முவமை வழிநிலை மடக்கே
.... .... .... .... ....
.... .... .... .... ....
ஐய முயர்வே விரவியல் வாழ்த்தன
வெய்து மிருபத்தெட் டலங்காரத் தாலு
மெழுத்துச் சொற்பொரு ளியாப்பு நெறியாலும்
நவையறச் செய்யுள் செய்யும் பாவலன்"

என்பதில் அலங்காரம், எழுத்து, சொல், பொருள் யாப்பு எனக் குறித்துள்ளது காண்க. இந்நிகண்டுகாரர் யாப்பருங்கலகாரருக்குப் பிற்பட்டவராகுமெனலாம். இக்கருத்து வலியுறுவதைக் காட்டுவாம். யாப்பருங்கலச் சூத்திரமாகிய சித்திரகவிச் சூத்திரம் பிங்கலந்தையில் காணப்படும் பிங்கலந்தையார் தொல்காப்பியச் சூத்திரங்களையும்,

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்
கூனுங் குறளு மூமுஞ் செவிடு
மாவு மருளு முளப்பட வாழ்நாக்
கெண்பே ரெச்சம்" என்னும் புறநானூற்றுச் செய்யுளை

யும் ஆண்டுள்ளாராதலின் நிகண்டுகாரர் யாப்பருங்கலச் சூத்திரத்தையும் ஆண்டாரெனலாம். யாப்பருங்கலம் பிங்கலயந்தை யாருக்கு முற்பட்டதென்பது நன்குவிளங்கும். யாப்பருங்கலம் 40ம் நூற்றூண்டின் முதற்பகுதியிலும் பிங்கலந்தை 10ம்நூற்றூண்டின் பிற்பகுதியிலும் இயற்றப்பட்டதெனலாம். யாப்பருங்கலம் 10ம்நூற்றூண்டில் இயற்றப்பட்டதெனத் தமிழ்ப்பொழில் 10ம்தொகுதியில் கூறியுள்ளாம். யாப்பருங்கலத்தில் சித்திரக்கவி சூத்திரத்திலும் "உருவக முதலாக வாழ்த்து ஈறாக" அணிவகையின் முறையைக் கூறியுள்ளாராதலின் அணியியல்நூல் யாப்பருங்கலகாரருக்கு முற்பட்டகாலத்தில் யாக்கப்பட்டிருந்ததாகல்வேண்டும். அணியியல் என்ற ஓர் நூலின் பெயரையும் அணிவகை இருபத்தெட்டின் பெயர்களையும் யாப்பருங் கல விருத்திகாரர் கூறியுள்ளதால் அணியியல் நூலிருந்ததென்பது தெளிவாம். இந்நூல் 9ம் நூற்றூண்டில் தோன்றியதெனக் கூறலாகும். இந்நூல் தோன்றியபின்னர் இலக்கணம் ஐந்துபாகுபாடுடையதாயிற்று. நக்கீரர் திருவெழுகூற்றிருக்கை பாடிய புலவர் அணியியலுக்கு முற்பட்டவராவர். நக்கீரர் திருவெழு கூற்றிருக்கை பாடிய புலவர் 9ம்நூற்றூண்டின் முற்பகுதியிலும் அணியியல் நூலார் பிற்பகுதியிலும் இருந்தவராவர். இப்புலவர் 5ம் நூற்றூண்டிலிருந்தவரென்று திரு. மறைமலையடிகள் கூறியிருப்பது சிறிதும் பொருந்தாதெனத் தெளிக.

நக்கீரர் என்னும் பெயர் பூண்ட புலவர் ஈசன் அருளிய செய்யுள் இன்னதெனச் சுட்டிக் கூறுது விடுத்ததை பின்னுள்ளோர் இறையனுர் என்னும் புலவர் பாடியுள்ள

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறி யெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே"

என்னும் செய்யுளைப் புணர்த்துக் கூறிய பின்னர் கதையொருவாறு பூர்த்தியாயிற்று. இறையனுருரைகாரர் நக்கீரர்க்கு ஒரு பெருமையைக் காட்டத் தொடங்கிய கதை முடிவுறுதற்கு ஒரு

நூற்றாண்டுக்குமேல் சென்றது. புலவர்களும் இக்கதையை நிறுவ புனை பெயர்களையும் பூண்டனர். இக்கதை முடிவுற்றது 10ம் நூற்றாண்டிலெனக்கூறலாகும்; இக்கதையனைத்தும் திருவிளையாடல்களிலும் கல்லாடத்தும் காணப்படும். இந்நூல்கள் 11ம் நூற்றாண்டில் தோன்றினவென்பது இங்குக் கூறிய வரலாற்றானும் உறுதி பெறுகிறது காண்க. இவ்வரலாறுகள் பழைய வரலாறுகளாகா; புதியனவே யாகுமென்க.

உக்கிரப்பெருவழுதியைக்குறித்த திருவிளையாடலும் புதிய வரலாற்றிலடங்குமென்பதைக் காட்டுவாம். இப்பாண்டியன் சங்கமேறிய புலவர்களில் ஒருவனாகக் கூறப்படினும் சங்கத் தொகைகளில் இப்பாண்டியன் பாடிய செய்யுள் காணப்படாது. இறையனாருரை சங்கம் இவன் காலத்தோடு முடிந்ததென்று கூறும். இப்பாண்டியன் காலத்து சங்கம் தழைத்தோங்கிய நிலையில் இருந்ததென்றுணரலாகும். நக்கீரரைச் சிறப்பிக்க வெழுந்த கதைபோல இப்பாண்டியனையும் சிறப்பிக்க சில கதைகள் தோன்றின. இப்பாண்டியன் அவையில் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதென்றும் அதற்கு ஈசன் முதற் கவிபாடிக் கொடுத்தாரென்றும், உக்கிரப்பெருவழிதியும் ஓர் கவிபாடினாரென்றும் பிற்காலத்தாரொருவர் கற்பித்தார். இதன் பின்னர் உக்கிரப் பெருவழுதி தெய்வத் தன்மை வாய்ந்தவனென்றும் நெடுஞ் சடையொடு பிறந்தானென்றும், வளை, வேல், செண்டு பெற்று அரிய செயல்களைப் புரிந்தானென்றும் பலவித கற்பனைகள் எழுந்தன. இக்கதையனைத்தும் திருவிளையாடலில்காணலாம்.

வளை, வேல், செண்டு பெற்ற வரலாறு சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டதோர் பழைய வரலாறாகும். சிலப்பதிகாரத்தில் பாண்டியன் பெயர் கூறாதிருத்தல் குறிக்கத்தக்கது. இக்கதை பிற்காலத்தில் உக்கிரப் பெருவழுதி மேல் ஏற்றிக் கூறப்பட்டது. இக்கற்பனை 8ம் நூற்றாண்டிற்கும் இறையனாருரைகாரர் காலத்திற்கும் பிற்பட்டதாகுமென்பதைக் கூறுவாம்.

பாண்டிய மன்னர் சடையன் என்னும் பெயரைப் பட்டப் பெயராக வகித்து வந்தார். அரிகேசரியின் புதல்வன் கோச்

சடையன் என்னும் இயற்பெயரை உடையவன், இவன் புதல்வன் ராஜசிம்மனுக்கு, தகப்பன் பெயரை முன் வைத்து சடையன் மாறன் என்னும் பெயர் வழங்கியது. இவன் புதல்வன் காலம் முதல் மாறன் சடையனென்ற பட்டமும், சடையன் மாறன் என்றபட்டமும் மாறிமாறி வழங்கப்பட்டது. இவ் வழக்கம் தொடங்கியது 8ம் நூற்றாண்டினிடைக்காலம் முதல் என்னலாம். பிற்காலத்தார் இவ்வரலாற்றுக்கு ஓர் கதை புணர்த்து குலமுதல்வனாகக் கூறப்படும் உக்கிர பெருவழுதி சடையுடன் பிறந்தானென்றனர். இக்கதை திருவிளையாடலில் கூறப்பட்டுளது. கல்லாடத்திலும் காணப்படும். இக்கதை 9ம் நூற்றாண்டிற்குப் பின்னரே புணர்க்கப் பட்டதாகும்.

மூர்த்திநாயனார், "மும்மையா லுலகாண்ட மூர்த்தி" என்று சுந்தரமூர்த்தி நாயனாரால், சிறப்பித்துக் கூறப்பட்டார். இச் சிறப்பின் முழுவரலாறு அறிவதற்கியலாது. திருவிளையாடலில் இவ்வடியார் அரசுரிமையைத் தாங்கி மதுரையில் ஆட்சிபுரிந்தாரென்று கூறப்படும். இவர் அரசு பூணுவதற்குமுன் வடுகக்கருநாடர் என்னும் ஒரு குலத்தினர் பாண்டியவரசை நீக்கி பாண்டி நாட்டை ஆண்டதாகவும் இக்குலத்தினர் சைனமதத்தைப் பரவச் செய்தனர் என்றும் இறுதியில் அரசுரிமை தாங்கக் கூடிய மக்களின்றி அக்குலம் முடிவுற்றதென்றும் மூர்த்திநாயனார் அமைச்சர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டாரென்றும் புராணம் கூறும். இம்மூர்த்திநாயனார் பசுக்காவலன் எனக் கூறப்படுவாராதலின் இவர் அரசகுலத்தைச் சார்ந்தவரன்று. பின்னர் பாண்டியர் எவ்வாறு அரசுரிமையெய்தினரென்று புராணம் கூறவில்லை. இக்கதை சுந்தரமூர்த்திகள் காலத்திலும் விளங்காததொன்றாக விருந்ததென்றறியலாகும். பிற்காலத்தில் மூர்த்தி நாயனார் வரலாறு விரித்துக் கூறப்பட்டது. புணர்ப்பெனவே படும்.

வேள்விக்குடி சாசனம் பாண்டி நாட்டை வெளவினவன் பெயர் களப்பிரன் என்று கூறுகின்றது. இவன் வமிசத்தார் மதுரையில் பலவாண்டுகள் ஆட்சிபுரிந்தார் என்பது பெறப்படும். இவர்களாட்சி ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் நடந்ததெனவும்

ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றனர். கடுங்கோன் இவர்களைத் துரத்திவிட்டு தன்னுரிமையை எய்தினனென்று சாசனங்கூறும், ஆயினும் இவன் காலத்திலாவது, இவன் புதல்வன் காலத்திலாவது, இவன் பெயரன் காலத்திலாவது போர் நடந்ததாக சாசனங் கூறவில்லை. கடுங்கோன் போரின்றி நாட்டை அடைந்தான் என்றாவது கூறப்படவுமில்லை. இவற்றை நோக்கின் கடுங்கோன் முதல் மூன்று அரசர்கள் வரலாறு வேள்விக்குடி சாசனத்தில் குறிக்கப் பட்டுள்ளது. உண்மையன்றென்னும் ஓர் ஆசங்கைக்கு இடந்தருகிறது.

களப்பிரர் என்பார் பெயர் 9ம் நூற்றாண்டுப் பல்லவசாசனங்களில் காணப்படும். பல்லவர்கள் சேர, சோழ, பாண்டி, களப்பிரரோடு போர் செய்தார்களென்று கூறப்படுகிறது. இக்களப்பிரருக்குரிய நாடு இன்னதென்றும் இவர்கள் பாண்டிநாட்டை அடைய எவ்வழி கொண்டாரென்று அறியவியலாது; இப்பெயர் கள்வன் என்னும் பெயரின் திரிபென்று கொண்டு வேங்கட நாட்டையாண்ட கள்வன் புல்லி என்ற குலத்தைச் சார்ந்தவரென்று டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் கூறுவர். திரு. மு. இராகவ ஐயங்கார் இக்களப்பிரர், பிற்காலத்தில் பலவிடங்களில் களப்பாளர் என்று விளங்கியவர் குலத்தின் முன்னோராவர் என்று கூற்றுவ நாயனர் வரலாற்றைச் சான்றாகக் கூறுவர். கூற்றுவ நாயனர் வரலாறும் மூர்த்திநாயனர் வரலாற்றைப் போலவே யுளது. சோழ நாட்டிற்கோர் பெருமை கொடுக்க கூற்றுவநாயனர் வரலாறு எழுந்ததுபோலும்.

சாசனவரலாறும் ஐயப்பாடுடையதாகும் மூர்த்திநாயனர் வரலாறும் புராணக் கதையாகச் சரித்திர வரலாற்றுக்கு ஒவ்வா திருக்கிறது.

கார் மண்டல சதகத்தார் முத்தரையர் என்னும் ஓர் குலத்தினர் மதுரையிலிருந்ததாகக் கூறுவர்.

"நூல்தொகுத்தா ரெவர்நுண்மா ணுழைபுல் நூலவையும்
பால்தொகுத்தா ரெவர்பன் மாடக்கூடற் பழம்பதிக்க
ணேல்தொகுத்தா ரெவர்முத் தமிழ்ப்பாண ரிசைவகுப்ப
மால்தொகுத்தார் முத்தரை யவர்காராளர் மண்டலமே"

என்னும் பாட்டில் இவர்கள் மதுரையிலிருந்தபோது பலநூல்கள் தொகுத்ததாகவும் இசைநூல்கள் தோற்றுவித்ததாகவும் கூறப்பட்டுள்ளார். நாலடியாரிலும் முத்தரையர் புகழப்பட்டுள்ளார. இக்குலத்தார் சோழ தேசத்தை 9ம் நூற்றுண்டு வரையில் ஆட்சிபுரிந்ததாகச் சோழ வமிச சரித்திரத்தா லுணரலாகும்; பல்லவ சாசனங்களிலும் இவர்கள் பெயர்கள் காணப்படும். குடுமியாமலை, பொன்னமராவதி முதலிய ஊர்களில் கிடைக்கும் சாசனங்களால் பாண்டி நாட்டின் சிலபகுதிகளை இக்குலத்தினர் ஆண்டு வந்தாரெனப் புலப்படுகிறது. நார்த்தாமலைச் சாசனத்தில் இவர்கள் மதுரை யரசர் குலத்தினரென்று கூறப்பட்டுளது. எனவே இவர்கள் ஒருபெருங்குலத்தை சார்ந்தவராய் தொண்டைநாடு முதல் பாண்டிநாடு வரையில் பரவியிருந்தனர் எனப் பெறப்படும். பாண்டிநாட்டை வெளவி யரசாண்டவர் இம் முத்தரையரே எனலாம். இவர்கள் சைன மதத்தைச் சார்ந்தவராயிருப்பதும் முன் கூறிய கருத்தை வலியுறுத்துகின்றது. களப்பிரர் என்பார் கூலிப்படை வீரரெனக் கருதலாகும். முத்தரையர் இக் கூலிப்படை வீரரைக் கொண்டு பாண்டி நாட்டைக் கவர்ந்து பலவாண்டுகள் அரசாண்ட காலத்து நூல்கள் தொகுத்தாரென ஊகிக்கலாகும். திகம்பர தரிசனம் என்னும் சைனநூல் விக்கிரமசகம் 526. (கி. பி. 470) பூச்சிபாதர் என்பாருடைய மாணுக்கரொருவரான வச்ச நந்தி என்பார் ஒரு திராவிட சங்கம் தாபித்தார் என்று கூறுமென்பர் (செந்தமிழ் 3: 406). இவ்வறலாறுகளை நோக்கின் கார்மண்டல சதகத்தார் வரலாறு உண்மையெனக் கொள்ளவமையும்.

இதுகாறும் திருவிளையாடல்களின் ஆராய்ச்சியால் கல்லாட நூல் 11ம்நூற்றுண்டிற்கு முற்பட்டதாகாதெனக்கூறினும். திரு. மறைமலையடிகள் கல்லாடம் 6-ம் நூற்றுண்டில் தோன்றிய தென்பது பொருந்தாது; மணிவாசகனர் வரலாறும் பிற்பட்ட காலத்ததாகும். இவ்வரலாறும் புராண காலத்திற்கு அணுகிய காலத்ததாகும். மணிவாசகனர் நூலில் காணப்படும் சில அகச் சான்றுகளால் மணிவாசகனர் காலத்தை ஆராய்வாம்.

(தொடரும்.)

# நற்றிணை

திரு. வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், நாகை.

(முற்றொடர்ச்சி துணர் 10. மலர் 4. பக்கம் 195.)

தாவர இயற்கைகள் :—இந்நூலுள் உவமமுகத்தானும் நிலவியல் கூறுமுறையானும் பல தாவர இயற்கைகளும் விலங்கியற்கைகளும் நுனித்தறிய வைக்கப்பெற்றுள்ளன. அவற்றை ஊன்றி நோக்கலுறின் தனித் தாவரநூலும் விலங்குநூலும் பயில்வார்க்கும் கிடைக்காத பெருநுட்பங்கள் சங்கத் தமிழ் ஆராய்வார்க்குக் கிடைக்கின்றன எனலாம். இந்நூல் "இற்றித் தோயா நெடுவீழ்" என்றதால் இத்திமரத்தின் விழுது ஆலம் விழுது போன்றிருப்பினும் நிலத்திற் பதியாது குட்டையாயிருக்கும் என்ற இயற்கையும், "உழுந்தின் மயிர்க்காய்" என்பதால் உழுத்தங்காய் பகைவர்களாகிய பூச்சிக் கூட்டத்தினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மயிர்போன்ற சிறுமுட்களைப் பெற்றிருக்கின்றது என்ற இயற்கையும் "சிறியிலைச்சந்து" எனப் பலவிடங்களில் வருவதால் சந்தன இலை மிகச்சிறியது என்பதும் அறியக்கிடக்கின்றன. இன்னும் சந்தனமரம் பிற மரங்களோடு சேராதவிடத்து மணம் எய்தாது என்பதும் சந்தனமரம் பக்கத்திலுள்ள பிற மரங்களின் ஆணிவேரிடையில் தன்வேரைச்செலுத்தி அம்மரங்களின் உணவுப்பொருளை திருடி நுகரும் இயல்பினது என்பதும் நறுமணம் பக்கத்திலுள்ள நறைக் கொடியின் சேர்க்கையினாலேயே எய்துகின்றது என்பதும் நுனித்தறியத் தக்கன. சங்க நூல்களிற் பெரும்பாலும் 'நறைக் கொடிச் சாந்து' எனச் சந்தனமரத்தை நறைக்கொடியுடன் சேர்த்துக் கூறும் சொற்றொடர் அமைப்புக் காணப் பெறுவது இக்கருத்தை வலியுறுக்கும்.

"மிளகு பெய்தனைய சுவைய புன்காய்
உலறுதலை யுகாஅய்ச் சிதர்சிதர்த் துண்ட
புலம்புகொள் நெடுஞ்சினை" எனவரும் அடிகளால்

உகாய் மரத்தின் இயற்கை நன்கு விளக்கப் பெறுகின்றது. உகாயின்காய் மிளகு இட்டு வைத்தாற்போன்ற சுவையை யுடையது எனவும், அதன் கிளை யடர்த்தியின்றிச் சிதர்ந்து இருக்கும் எனவும் அதன் காயைத் தின்று புறு காரம் தாங்க மாட்டாமையால் கழுத்தைச் சிலிர்த்து மயங்கி விழுகின்றது எனவும் கூறப்பெற்றுள்ளது. 'மிளகு உகாய்' என்ற சொற்றொடர் 'மிளகாய்' என மருவி யிருக்கலாமோ என்ற எண்ணம் உண்டாகிறது. ஆனல் உகாய் செடியின் பெயரன்றி மரத்தின் பெயராயிருப்பதே தடையாகின்றது. 'நாரின் முருங்கை' 'நாரில் பாலை' என்ற தொடர் மொழிகளினின்று பாலைமுருங்கை போல்வன நாரில்லா வகையைச் சார்ந்தன என்பது அறியப்பெறும்.

"பீளொடு திரங்கிய நெல்லிற்கு
நள்ளென் யாமத்து மழைபொழிந்தாங்கு" எனவரும் அடிகளால் தொண்டைக் கதிராயிருக்கும் நெற்பயிர் நடுயாமத்து மழைபெய்தால் கதிர் வெளிப்பட்டுச் செழிக்கும் என்பது விளக்கப் பெறுகின்றது.

தமிழாசிரியர்கள் பொருளியற்கையே யன்றி அவற்றின் தன்மைகளேயும் ஆராய்ந்து வைத்திருந்தனர் என்பது தமிழ் நாட்டுச் சித்த வைத்திய நூல்களைப் படிப்பதனுல் தெளியப் பெறுகிறது. இந்நூலினும் அவ்வியற்கை,

"வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று
இருவெதி ரீன்ற வேற்றிலைக் கொழுமுளை
சூல்முதிர் மடப்பிடி நாண்மேய லாரும்" என்றதால் மூங்கில் முளையைத் தின்றல் கருக்குலைந்து விடும் என்பது அறிவிக்கப்பெறுகின்றது. தற்போதும் கருவுயிர்த்த மாதர்களுக்கு கருக்குடர் தூய்மை யுறுவதற்காக மூங்கில் முளையிற் சிறிது இடித்துக் கொடுத்தலும், கன்று போட்ட மாடுகளுக்கு மூங்கிலிலையைத் தின்னக்கொடுத்தலும் வழக்காகவுள்ளது.

உயிர்களின் இயற்கை:— இந்நூல் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன முதலிய உயிர்களின் இயற்கை நேரிற் கண்டாற் போலப் புலம் பெருக்குவதில் நலமிகச் சிறந்துள்ளது. அன்னங்கள் வயல்களில் வசிக்கும் என்பதும்(73) கடற்கரையில்

இரைதேடும் என்பதும், தானே இரைதேட முடியாத தன் குஞ்சுகளுக்குக் கொண்டு போகும் என்பதும் (356), அன்றில்கள் பனைமரங்களில் கூடுகட்டி வாழும் (303) என்பதும், ஒன்றையொன்று பிரிந்தால் வருந்தும் என்பதும் கூறப்பெறுகின்றன.

'சேயிறு எறிந்த சிறுவெண் காக்கை' என்பதால் காகம் இருல்மீன் உண்ணும் என்பதும் பகற்காலத்து இரை தேடிப் பொழுது பட்டவுடன் கூட்டையடையும் (343) என்பதும், உணவு கிடைப்பின் தன்னினத்தாரையும் அழைத்து உடனிருந்துண்ணும் என்பதும் விளக்கப் பெறுகின்றன.

குயில் சிவந்த கண்ணையுடையது; வேனிற்காலத்து மாந்தளிரையுண்டு கூவும் என்பதும் மாமரத்திலேயே பெரும்பாலும் வதியும் என்பதும் 118ம் செய்யுளில் உணர்த்தப் பெறுகின்றது.

தலைவன் இரவுக் குறிக்கண்வந்து இல்லின் அகவரையுள் நிற்கத் தோழியானவள் உணர்ந்து கோட்டான் கத்துவதால் இடையூறு உண்டாகும் என அறிவுறுக்கின்றவள் கூகையை நோக்கிக் கூறுவதாகவரும்

"எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத் துடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கட் கூருகிர்
வாய்ப்பறை யசாஅம் வலிமுந்து கூகை
மையூன் றெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்" (83) என்ற

செய்யுளில் நீர்த்துறைக்கண் கடவுள் எழுந்தருளிய மரத்திலுள்ள கோட்டானே ஆட்டிறைச்சியை நெய்யோடு சேர்த்துச் சமைத்த சோற்றோடு எலியிறைச்சியையும் சுட்டுத் தருவேன் நீ கத்தாதே எனத் தோழி வேண்டிக்கொள்ளுகிறாள். இதனால் கோட்டான் வசிக்குமிடமும் அதற்கு ஆட்டிறைச்சியைக் காட்டிலும் எலியிறைச்சியில் விருப்பம் மிகுதி என்பதும் அறியப் பெறுகின்றன.

நாரைகள் இருல்மீனையும்(67)நாங்கூழையும்(21)நண்டையும் (35) உண்ணும் என்பதும் "கொழு மீனருந்த குருகு குப்பை

வெண்மண லேறியரசர், ஒண்படைத் தொகுதியினி லங்கித் தோன்றும்'' என்பதால், இரை தேடச் செல்லுங்கால் கூட்ட மாகப் பறந்துசென்று படைவீரர் ஒழுங்குபோல வரிசையாய் உட்காரும்என்பதும், முயிற்றுமுட்டையைவாய்வைத்து உறிஞ்சு வதில் விருப்பமதிகம் என்பதும் வண்டிப்பாரிலும் முட்டை யிட்டு வசிக்கும் என்பதும் விளக்கப்பெறுகின்றன.

வௌவால் பறவையாயினும் பல் உண்டென்பது "முள்ளெ யிற்றுவாவல்" என்ற சொற்றொடரானும் (87) வேம்பின்பழம் இருப்பைப்பழம் இவற்றையும் உண்ணும் என்பதும் (297)அறி யப்பெறுகின்றன.

புரு பாலைநிலத்துக் கள்ளியின் தலையில் கூடுகட்டி வசிக்கும் என்பதும் செல்வர் மனைகளில் மேற்றளங்களில் 'புருக்கூடு' என்றே ஒருபகுதி கட்டப்பெறும் அதில் இவைகள் வாழ்வதும் உண்டென்பதும் மிளகு போன்ற உகாயின் காயைத் தின்றுக் காரம் பொறுக்காமையால் கழுத்துசிலிர்த்து நடுங்கும் என்பதும் கொக்கு கார்காலத்து உலாவும் என்பதும் ஆகிய இயற்கைகள் நன்கு விளக்கப்பெறுகின்றன. இன்னும் கானங்கோழி மயில் முதலியவற்றின் இயற்கைகளும் கூறப்பெறுகின்றன.

விலங்கினங்களில் மான்கரிய கழுத்தையுடையது என்பதும் குமிழங்கனியை அதிகமாக உண்ணும் என்பதும் மழைக்காலத் தில் காட்டைவிட்டு வெளியேறும் என்பதும், வயதுமுதிர்ந்தால் கலைமான்களுக்குக் கொம்பு உதிர்ந்துவிடும் என்பதும், வேட்டை யாடும்போது அதனைச் சேற்றில் வெருட்டி யலைத்துச் சோரச் செய்து பிடிப்பார்கள் என்பதும் பலவிடங்களில் விளக்கப் பெறு கின்றன.

புலி:—வரியையுடையதும் புள்ளியுடைதும் என இருவகைப் படும் என்பது "பூம்பொறி யுழுவை" "புலிவரி" என்றதொடர் மொழிகளான் அறியலாகும். புலி; யானை மான் முதலியவற்றை யடித்துண்ணும் என்பதும், மலைக்குகைகளிற் பெரும்பாலும் வசிக்கும் என்பதும், பெண்புலியின் புனிறுதீர யானைகளைக் கொன்று கொடுக்கும் என்பதும், யானையின் குருதிகுடிப்பதில்

மிகுதியான விருப்புடையது என்பதும் கூறப்பெறுகின்றன. சிறப்பாக "களிறு வலம்படுத்த பேழ்வாய் உழுவை" எனப் புலி யானது வேட்டையாடும்விலங்கு வலப்பக்கமாகவிழக்கொல்லும். இடப்பக்கம் சாய்ந்ததாயின் அதனை யுண்ணாது என்பது கூறப் பெறுகின்றது. இக்கருத்துஅகநானூறு புறநானூறு நாலடியார் முதலிய நூல்களிலும் நன்கு விளக்கப்பெற்றுள்ளது.

கரடி:—கறையானை விரும்பியுண்ணும் என்பதும் புற்றில் வாய்வைத்து உறிஞ்சிக் கறையானை இழுக்கும் என்பதும் அறிவுறுக்கப் பெறுகின்றன. இக்கருத்து சிலப்பதிகாரத்திலும் விறலிவிடுதூதிலும் விளக்கப்பெற்றுள்ளது.

களிறு:— யானை நெய்தலிலைபோன்ற செவியையும் (47) அதன்கன்று சிறிய தலையையும் உடையது. தன்கோபத்திற்கு எதிர்வாரில்வழி ஏதாவது மரங்களை மோதியாயினும் தன் சினத்தை மாற்றிக்கொள்ளும் என்பது "கடுநடை யொருத்தல் ........வம்பலர்க் காணது அச்சினம் பனைக்கான்று ஆறும்" (126) என்ற அடிகளானும் களிறும்பிடியும் ஒன்றையொன்று பிரியநேரின் மிக வருந்திப் பிளிற்றும் என்பதும் (14) களிறு புலியையும் குத்தும் ஆற்றலது என்பதும் கூறப்பெறுகின்றன. "இருஞ் சேறாடிய நுதல" என்பதனுல் சேற்றையள்ளித் தலையில் இட்டுக் கொள்ளுதலும், "கைபிடை வைத்தது மெய்பிடைத் திமிரும், முனிவுடைக் கவளம்போல" என்பதனால் உணவைத் தன்மேல் வீசியெறிந்து கொள்ளுதலும், களிறு நெல்லுணவை விரும்பிக் கொள்ளுதலும் விடியற்காலத்தில் எழும்பி மலைநாட்டுரை எழுப் பும் என்பதும் உணர்த்தப்பெறுகின்றன. "கதனடங்கி யானைத் தடவுநிலை யொருகோட் டன்ன" (18) என்ற பகுதியால் சில யானைகளுக்கு ஒற்றைக் கொம்பு உண்டென்பது அறியப் பெறு கின்றது. இவ் ஒற்றைக்கொம்புடைய யானை வலிமிக்கதென் றும், யானைகள் கூட்டமாகத் திரியும்விலங்கினம் என்பது "குழுவு படூஉப் புறந்தருதல் குஞ்சரத்தியல்பே" என்பதனால் விளங்கு தலின் அக்கூட்டத்திற்கு ஒற்றைக்கொம்புடையயானை தலைவனா யிருக்கும் என்பதும் கேள்வியுண்டு. இதற்கு "யூதபதி" என்ற

பெயரிருப்பதாக வடநூற் கவிஞர்கள் கூற்றாலறியக்கிடக்கின்றது. யானையை அரசர்கள் போருக்கு உதவியாக வளர்த்தனர் என்பதும், அரண் பல கடத்தலுக்கும், போர் செய்தற்கும் பயன் படுத்தி வந்தனர்.

குதிரைக்கு அரிசிக்காணம் விருப்பமான உணவாதலின் அதனைவிரும்பியுண்ணும் என்பதும், சிங்கம்யானையைக் கொன்று திரிதலும், நரி தன்னிழலோடு விளையாடுதலும், ஓந்தி நிறம் பெயர்தலும், மலைப்பாம்பு யானை முதலியவற்றை விழுங்குதலும் கூறப்பெறுகின்றன.

மந்தி யானை முதலியன தாவர உணவின ஆதலின் யானை ஊன் நாற்றம் பொறாது புலியைக் கொன்றதாலுண்டாகிய உதரக்கவர்ச்சியை உடனே கழுவிப் போக்கிக்கொள்ளுகின்றது என்பதும் மந்தி மீனின் புலால் நாற்றம் பொறாது தும்முகின்றது என்பதும் மிகச் சிறந்த இயற்கைகளாம்.

(தொடரும்.)

# தமிழ்க் கவிச் சுவை.

வித்துவான். வீ. குமாரசாமி ஐயர், தமிழாசிரியர், மேலூர்.

இன்றைக்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த மேலூர் என்னும் ஊரில் தங்கப் புலவர் என்னும் மகம்மதிய தமிழ்ப் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவரின் வழியினர். இவர் பண்டைத் தமிழ்ப் புலவர்களைப் போன்றவர். பிழைப்புக்காகக் கல்விபயிலாது புலமைக்காகவே கற்றுத் தேர்ந்தவர். இவர் ஒரு பலசரக்கு வியாபாரியாக விளங்கினர். அவ்வூரில் அவரது கடையே வியாபாரத்தில் சிறந்து விளங்கிற்று. இவரைப் புலவர் என்றும், இவரது கடையைப் புலவர்கடை என்றும் அங்குள்ளோர் கூறுவர். இவர்தம் தொழிலையும் விருத்தி செய்து கொண்டு புலமையையும் விளக்கி வந்தார். இவர் புலவர்

களோடு அளவளாவுவதில் மிக்க விருப்பமுடையவர். வந்த புலவர்களைத் தமக்குத்தெரிந்த செல்வர்களிடம் பழக்கப் படுத்தி வைப்பார்; பரிசும் பெறச் செய்வார்; தன்னால் கொடுக்கத் தக்க பொருளையும் கொடுத்துதவுவார். இவர் காலத்தில் களஞ்சிப் புலவர், மைதீன் புலவர் என்ற மகம்மதிய புலவர்களும் அவ்வூரி லிருந்தனர். களஞ்சிப் புலவருக்கும் இவருக்கும் அடிக்கடி கல்வி சம்பந்தமான பேச்சுகள் நிகழ்வதுண்டு. பண்டங்கொள்ள வருவோர் பலரும் அப்பேச்சைக் கேட்டுக்களிப்பர். மாலை 6மணிக்கு மேல் கடையில் வியாபாரம் நடைபெறுவது மிகச் சுருக்கமாகவே யிருக்கும். இவ்விருவர்தம் சொற்போரே நிறைந்திருக்கும். இதனைக்காண மக்கள் வந்து குழுமியிருப்பர். வந்தவர் செவியுணவு மாந்திக் களிப்புற்றுச் செல்வர்.

இங்ஙன மிருக்க, ஒருகால் புலவர் தனது கடைக்கு வேண்டிய சரக்குகள் வாங்க மதுரைக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது மேலூரிலிருந்து மதுரைக்குச் செல்ல இப்பொழுது போல் வாகன வசதிகள் கிடையா. இரட்டைமாட்டு வண்டியில் தான் செல்ல வேண்டும். அவ்வண்டியும் வேண்டியபோது கிடைக்காது. குறிப்பிட்ட சில வண்டிகளே போக்குவரவிற் குரியவைகளாயிருந்தன. புலவரை வழக்கமாய் ஏற்றிக்கொண்டு போகும் வண்டிக்காரர் ஒரு மகம்மதியர். அவர் பெயர் சேகுமைதீன் ராவுத்தர் என்பது. அவர் புலவரை மாமா என்றழைக்கும் முறையுடையவர். அவருக்குப் படிக்கத் தெரியாது. ஆனால் புலவரிடம் அதிக பழக்கமும் அன்பும் உடையவர். புலவர் அவரை யழைத்து,

புலவர்:—உன் வண்டி மதுரைக்குப் போகிறதா?

ராவுத்தர்:—ஆம். மாமா. தாங்கள் வருகிறீர்களா?

புல:—ஆம். போகவேண்டும். வண்டியில் இன்னும் யாரேனும் வருகிறார்களா?

ராவு:— நான்கு பிராமணர்களுக்கு வாடகை பேசினேன். அவர்கள் வருகிறார்கள். பகற்சாப்பாட்டிற்கு மதுரையில்

கொண்டுபோய் விடவேண்டும்; வேறு எவரையும வைத்துக் கொள்ளக்கூடாது; இது கண்டிப்பு என்று சொன்னார்கள் நானும் ஒப்புக் கொண்டேன்.

புல:—அப்படியானால் நான் எப்படி வர முடியும்?

ராவு:—வாருங்கள். நான் சரிசெய்து கொள்கிறேன்.

புல:—சரி. நான் முன்னே போய்க் கொண்டிருக்கின்றேன். அவர்களை யேற்றிக்கொண்டு வா. வழியில் ஏறிக்கொள்கிறேன். உடனே ராவுத்தர் சென்று வண்டியில் நிறைய வைக்கோலைப் போட்டுப் பரப்பி அதன்மேல் கம்பளம் விரித்து அவ்வந்தணர் களையும் உட்காரவைத்துக் கொண்டு வண்டியைச் செலுத்தி வந்தார். புலவர் ஊருக்கப்பால் ஒரு கல் தூரத்தில் போய்க்கொண் டிருந்தார். அப்பொழுது வண்டியும் வந்து சேர்ந்தது.

ராவு:—மாமா. வண்டியிலேறிக் கொள்ளுங்கள்.

அந்தணர்கள்:—என்னடா. நீ சொன்ன தென்ன? யாரையோ கூப்பிடுகிறாயே!

ரரவு:—உங்களுக்கென்ன சாமி. நான் நடந்து வருகிறேன் மாமா உட்கார்ந்து கொள்ளட்டும். மாடு தானாகச் செல்லுமே.

அந்த:—என்ன கஷ்டகாலம். வண்டிக்காரர்கள் பேசுவ தொன்று செய்வதொன்று. எங்கும் இப்படித் தானிருக்கிறது. தொலையட்டும். இந்தக் காட்டில் இனிமேல் என்ன செய்கிறது.

புல:—(வண்டியிலேறிக் கொண்டு) சுவாமிகளே! எங்குச் செல்கிறீர்கள்?

ஒருவர்:—எங்குப் போனால்தான் என்ன? உமது காரி யத்தைப் பாரும். மாடு வேகமாய் நடக்கட்டும்.

மற்றொருவர்:—மதுரைக்குப் போகிறோம். கொஞ்சம் அப் படியே யிருந்து ஓட்டி வாரும்.

புல:—சுவாமி! ஏதாவதொரு கதைசொல்லுங்களேன். காலம் நற்காலமாகக் கழியட்டும்.

ஒருவர்:—கதையாவது காரணமாவது.

மற்றொருவர்:—(இவர் வாக்கின் திறத்தைக் கண்டு) உமக்கு ஏதேனும் தெரிந்தால் நீர்தான் சொல்லுமே. கேட்போம். என்று சொல்லியவுடனே புலவர் இராமாயணத்திலுள்ள,

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேறினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
யுருண்ட வாய்தொறும் பொன்னுரு ளுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையும் தங்கிற மாக்கிய இரதம்."

என்ற செய்யுளின் சந்தர்ப் பத்தையும் பொருளையும் விரித்துரைத்தார். புலவருடைய இசைநயத்தையும் பொருள் கூறுந் திறனையுங் கண்ட அவர்கள் அக்கவிச்சுவையில் மயங்கினர். பின்னரும் சில பாடல்களைச் சொல்லக் கேட்டனர். ஒவ்வொரு பாடலைக் கூறும் போதெல்லாம் இங்கு வாருங்கள் இங்கு வாருங்கள் என்றழைத்துத் தங்கள்மத்தியில் உட்காரவைத்துக் கொண்டனர். தங்களிடமிருந்த வெற்றிலைப் பாக்கு முதலியவைகளைக் கொடுத்து உபசரித்தனர். நடந்துவந்த ராவுத்தரையழைத்து வண்டியில் உட்கார்ந்து கொள்ளச் சொன்னார்கள். ராவுத்தர் மாட்டை வேகமாக ஓட்டும்பொழுதெல்லாம் அவர்கள் "அப்பா! நீ மெதுவாகவே ஓட்டிச் செல்லவேண்டும். நாங்கள் உன்னிடம் முன்னர்க் கூறியதை நினைத்துக் கொண்டிராதே. மதுரைக்கு மெதுவாகவே போய்ச் சேருவோம். புலவர் அளிக்கும் கவியுணவே போதியது" என்று புகழ்ந்தனர். அவர்கள் புலவரிடம் அளவளாவிக் கொண்டு வழியைக் கடந்து மதுரைப் பதியடைந்தனர். அங்குச் சென்றதும் தங்கள் தங்கள் அலுவலைப் பார்க்கப் பிரிந்து சென்றனர்.

இவ்வரலாற்றை எமக்குக் கூறிய சேகுமைதீன் ராவுத்தர் இப்பொழுதும் இருக்கிறார். இவருக்குச் சுமார் 70 ஆண்டுகளிருக்கலாம். இவர் இராமாயணம், பாரதம், சீறாப்புராணம் இவைகளிலுள்ள செய்யுளையும் பொருளையும் புலவர் பலகால் சொல்லக் கேட்டறிந்தவர். இப்பொழுதும் இவரிடம் மேற்கூறிய மூன்று நூல்களிலுள்ள எச்செய்யுளையேனும் கூறின் இன்ன நூலில் இந்த இடத்திலுள்ளதென்று தெளிவாகக் கூறுவார். செய்யுளின் சந்தமும் நன்கறிந்து ஆனந்திப்பார்.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

# நெடுந்தொகைக் குறும்பொருள்

திரு. வித்துவான், மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்பள்ளி, ஆரணி.

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 9. பக்கம் 315.)

## பா. கஉ. குறிஞ்சி. கபிலர்.

பகற்குறி வாரா நின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு இரவுக்குறி வாரா வரைவல் என்றாற்கு அதுவும் மறுத்து வரைவுகடாயது. இப்பாட்டினுள் 'நீ வரின்' என்றது வரவு மறுத்தது. 'சீறடி சிவப்ப' என்றது செறிப்பறிவுறீஇயது.

யாயே கண்ணினுங் கடுங்கா தலளே.
எந்தையும்,
நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்.
யாமே,
பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே.
ஏனலங் காவலர் ஆனா தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளில்ஆடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பபங் கொண்மார்
குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேப்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைபடப் பெயரும்
நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா ழலளே.

யாய் கண்ணினும் கடு காதலள் = என் அன்னை கண்ணைக் காக்கும் விருப்பத்தினும் (தலைவியைக் காத்தலில்) மிக்க விருப்பத்தினள், எந்தையும் (சிறு அடி) நிலன் உற பொறாஅன் இல குறுமகள் சிறு அடி சிவப்ப எவன் இயங்குதி என்னும் = என்

அப்பனும் (சிறியதாள்) நிலத்திற் பொருந்தத் தாங்காதவனாய் எடி சிறு பெண்ணே முதிராத் தாள்கள் சிவக்க என் செய்யப் போகின்றாய் என்று வினவுவான், யாம் எ பிரிவு இன்று இயைந்த துவராநட்பின் இருதலை புள்ளின் ஓர் உயிரம்=யாங்களோ பிரிதலின்றிப் பொருந்திய உவராத நட்பினால் இருதலையையுடைய புள்ளினைப் போல (எம் ஈருடலிலும்) ஒருயிரை(யே)யுடையேம், எனல் காவலர் ஆனாது ஆர்த்தொறும் கிளி விளி பயிற்றும் வெளில் ஆடு பெருசினை விழுகோள் பலவின் பழுபயம்கொண்மார் குறவர் ஊன்றிய குரம்பை புதைய=தினைப் புனங் காக்கின்றவர் நீங்காது(இடைவிடாது)ஒலிசெய்புந் தோறும் கிளிகள்(அவர்கள்) விளித்தலைச் கற்கும் அணில்கள் ஆடுகின்ற பெரிய கிளைகளில் சிறந்த காய்களையுடைய பலாமரத்தின் பழுப்பி(னையுற்ற கனி யி)ன் பயனைக் கொள்ளுமார் குறவர்நாட்டிய குடில்மறையுமாறு, வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்= வேங்கைமரத்தினின்றும் தாவிய தேன்பாய்ந்த காட்சியை, புலிசெத்து=புலி என்றுகருதி, வெரீஇய புகர் முகம் வேழம்= அஞ்சிய புள்ளியையுடைய முகத்தையுடைய யானை, மழைபடு சிலம்பில் கழைபட பெயரும் நல் வரை நாட=மழை பெய்கின்ற பக்கமலையில் மூங்கில்கள் (கால்களான் மிதிக்கப்பட்டு) மடிய பெயர்ந்தோடும் நல்லமலைநாட, நீவரின்=நீ வருவாயேல், மெல்இயல் வாழலள்= மெல்லியலாள் வாழமாட்டாள்.

யாய் கண்ணினுங் கடுங்காதலள். பொருஅனுப் ‘இல குறுமகள், அடிசிவப்ப எவன் இயங்குதி’ என்னும். யாம் பிரிவு இன்று இயைந்த துவரா நட்பினுல் இருதலைப் புட்போல் ஒருயிரம். காவலர் ஆனாது ஆர்த்தொறும் அவ்விளியைக் கிளி பயிற்றுஞ் சினை. வெளில் ஆடுசினை. சினையில் விழுக்கோளை யுடைய பலவு. பலவின் பழுப்பயம். பயங்கொண்மார் ஊன்றிய குரம்பை. குரம்பை புதையத் தேம்பாய் தோற்றம். வேங்கை தாஅயதேம். தோற்றத்தைப் புலி (எனச்) செத்து (கருதி) வெரீஇய வேழம். மழைபடு சிலம்பு. சிலம்பிற் கழைபடவேழம் பெயரும். வேழம் (கழை படப்) பெயரும் வரை. நாட நீவரின் மெல்லியலாள் வாழாள்.

என் அன்னை கண்களைக் காத்தலிற் கொள்ளும் விருப்பத்தின் அளவினும் பெருகிய விருப்பத்தோடும் இவளைக் காப்பாள். எந்தையும் இவள் தன் அடியை நிலத்துவைத்து நடத்தலைப் பொருளுகி, 'எடி குழந்தை என் செய்ய இளந்தாள் சிவக்க நடந்து போகின்ருய்' என்பான். யானும் இவளும் பிரிதலேயின்றிப் பொருந்திய உவராத நட்பால் ஈருடலும் ஒருயிரும் உடையேமாகி இருதலைப் புட்போன்றுளேம். ஆதலின், இவட்கு நேர்ந்த துயர் எனக்கு நேர்ந்ததேயாம். மலைநாட, நீ பகலும் இரவும் வாரற்க. யாங்கள் இறவாதுறையும் வண்ணம்வரைந்து கொள்ள முயலுக என்றனள் தோழி.

"யானையானது வெருவித் தகாத குரம்பையை வெருவத்தக்க புலியென்று கருதித், தனக் குணவாகிய கழை முறியப் பாய்ந்தாற் போல, வெருவத் தகாத எங்கள் தமரை வெருவி வரைய முயலாது திரியவே, நாங்களே இறந்துபடும்படியாயிற்று என்றவாறு" (இவ்வுள்ளுறை குறிப்புரையாளர் ஈண்டுப் புறப் (202) பாட்டின் உரையை எழுதியது) நோக்குதல் நன்று.

தாயின் பெருங்காதல், தந்தையின் பேரன்பு, தோழியின் பிரியா நட்பு, இருதலைப்புள், காவலர் தினைப்புனத்தில்ஆர்த்தல், அவர் விளியைக்கிளிபயிற்றல், பலாவின்நிலை, குறவர் குரம்பை, அதன்மேல் வேங்கைமரத் தேன்பாய்தல், அது புலிபோலத் தோன்றல், அது கண்டு யானை வெருவுதல், வெருவிய யானை சிலம்பிற் கழை மடியப் பெயர்ந்தோடுதல், வரைநாடு, பகற்குறியருமை, இரவுக்குறி மறுத்தல், வரைவு கடாதல் முதலியவற்றைக் கொண்டு விளங்கும் இச்செய்யுள் "பொய்யா நாவிற் கபிலன்" "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்"க் கேதுவாயினவற்றுளொன்ருய், அப்புலவர் பெருமானது "தாழாது செலுத்த செய்யுள் செய் செந்நா"வின் றிறத்தினைக் குறிப்பதுணர்க. (புறம். 174. 63.)

பலாப்பழங் கொள்வான் குறவர் நாட்டிய குரம்பை, வேங்கை மரத்தினின் றுதிர்ந்த பூவால் மூடப்பட்டிருத்தலின்

அதனைப் புலியென்று எண்ணி அஞ்சுதலுற்ற யானை மழை பெய்யும் மலையிற் கழை மடியப் பெயர்ந் தோடுமென்றது புலவரை மகிழ்விக்கும்.

பயிற்றல்=கற்றல். (கலி. 81.) சொல்லல். (கலி. 75.) கூவுதல் (அகம். 19.) பல்காற் சொல்லுதல் (அகம். 6.) பயிலச் செய்தல் (அகம். 54.) மழை படு சிலம்பு=மழை பெய்கின்ற பக்கமலை (கலி. 48. 103. 46). படுதல்=சொரிதல், பெய்தல். மஞ்சு தவழும் எனலும் பொருந்தும். தேம்:-குவளைத் தேம் பாய்தாரன், தேம் பெய்தளவுறு தீம்பால், தேம்படு சிமையப் பாங்கர், தேம்பிழி நறுங்கள். (அகம். 38, 89, 94, 105).

வேங்கைப் பூவும் வேங்கைப் புலியும்:—

1. புலிப் பறழன்ன பூஞ்சினை வேங்கை.
(தொல். மரபு. 10. பேராசிரியம்)

2. புலிப் பொறி வேங்கைப் பொன்னிணர் (ஐங். 396.)

3. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காடு (குறுந். 47.)

4. மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின
அழுகை மகளிர்க் குவகை செப்ப (பரி. 14:-11-2.)

5. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும் (புறம். 202)

6. கருங்கால் இனவேங்கை கான்றபூக் கல்மேல்
இருங்கால் வயவேங்கை ஏய்க்கும் (திணைமாலை நூற். 26)

7. உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கை (கலி. 38)

8. வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும் (கலி. 46)

9. நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகம்நண்ணி
மறமனை வேங்கையென நனியஞ்சும் (கோவையார். 96)

10. புலிய தள் போர்ப்ப,
எடுத்து நின்றதே போன்றதா லிணர்விரி வேங்கை

11. புலியுரு மருளப் பூத்த பூந்துணர் வேங்கை பொள்வி.
(காஞ்சிப். திருக்கண்புதை. 156. 252)

12. யானை யஞ்சி யோடுதல்:—
"சார லாபாற், றேங்கல் மிசைய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலிற் கயவா
யிரும்பிடி யிரியுஞ் சோலை" (அகர். 228)

13. குறவர் குரம்பையும் பலாவும்:—
"மலைச்சாரல்........கானவன்........மராஅம் பொருந்திக்
கோல்தெரிந்து....யானை யருநிறத் தழுத்தி.......வெண்
கோடுகொண்டு தன்புல்வேய் குரம்பை புலர
வூன்றி முன்றி னீடிய முழவுறழ் பலவிற்
பிழிமகி ழுவ கையன்" (அகம். 172)

14. புலி யானையைக் கொல்வான் பலாகீழுலி லொளித்தல்:—
"குறங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யின்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கும் நாடு" (ஐங். 216

ஈருடற் கோருயிர்:—

1. 'ஓருயிரா யிருக்கவுடம் பிரண்டா யிருப்பாய்' (கலி. 87உரை

2. 'ஓருயிராக வுணர்க வுடன்கலந் தார்க்
கீருயி ரென்ப விடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னட்கும்
உடனே யுலந்த துயிர்'. (பு. வெ. மா. 262)

3. பாவைகீ புலவியின் நீடல் பாவியேற்
காவியோன் றிரண்டுடம் பல்ல தூற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழைந்த வன்னமே.' (சிந்தா. 1017)

4. 'கட்டி லேறிய காமரு காளையும்
மட்டு வாயவிழ் மாமலர்க் கோதையும்
விட்டு நீங்குதல் இன்மையின் வீவிலார்
ஒட்டி யீருடம் போருயி ராயினர்.' (சிந்தா. 1981
)

5. மருங்கிலா நங்கையும் வசையி லையனும்
ஒருங்கிய இரண்டுடற் குயிரொன் றாயினர்
கருங்கடற் பள்ளியிற் கலவிநீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ
(கம்ப. பால. மிதிலைக். 38)

6. 'காதத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஓருயிர் கண்டனம் யாம்.'

7. ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயிரீருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்'.
(திருக்கோவையார். 71, 307)

8. 'நன்றே யினியவர் நண்பு நமக்கும் அவர்க்கும் உயிர்
ஒன்றே நினைவும் உரையும் ஒன்றே.'
(அம்பிகா. கோவை. 294.)

9. 'நம்இருவருக்கும் ஊன் ஒன்று உயிர்ஒன்று உளமும்ஒன்று'
(திருவாரூர்க்கோவை. 149)

10. 'காவிபோற் கண்ணிக்கும் கண்ணியந் தோட்காளைக்கும்
ஆவிபோ லாடையு மொன் றானதே.'
(நளவெண்பா. கலிதொடர். 86. சுயம்வர. 167)

11. 'கூடியிருவரும் ஒருவரென விதயங் கலந்த தன்பின்
குறித்ததூஉம்.' (வில்லிபார. அருச். தீர்த. 30)

12. ஐந்துடற் கோருயிர்.
'மாருதி முதலா வுள்ள மன்னவர் நால்வர் தம்மோ
டோருயி ரான மற்றை யொருவனே யொருவ னானன்.'
(ஷை நச்சுப். 32)

13. 'ஒன்றாய் ஐந்து செயற்கையாம் உடல்.' (ஷை நச்சுப். 35)

14. தலைவனுந் தலைவியும் ஒருவர்க்கொருவ ருயிராதல்.
'வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிர்என
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅல் தோழி யழுங்குவர் செலவே.' (குறுந். 135)

15. 'நின்னு ருயிரன்ன நேரிழை மாதரு நேரிழையாள்
தன்னு ருயிரன்ன மீனியுமாய் அங்குச்சார்ந்த செயல்
சொன்னர் சிலர்.' (திருவாரூர்க்கோவை. 404)

16. தலைவன் தலைவியின் உயிர்க் குயிராதல்.
'உயிர்க் குயி ரன்னர்.' (குறுந். 218)

17. தலைவியின் உடலுக்குத் தோழி யுயிராதல்.
'ஊனுகும் மங்கை யுயிராகும்நீ அவ்வுடலுக்குயிர்
யானுகும் நல்லுணர் வெப்போதும் இப்படிஎண்ணுகவே.'
(ஷை 160)

18. தலைவி உடம்பொன்ருக இல்லையே என்று வருந்துதல்.
'நன்ரும் இறைவற்கும் நன்றியிலேற்கும்முன் நான்முகத்தோன்
ஒன்ரு விதித்திலனே உயிர்போல உடம்பையுமே'
(தஞ்சைவாணன். பா. 149)

19. 'இன்புற்ற காலத் திருவர்க்கு மொன்றுயிர்' (ஷை 272)

20. 'மெய்யிரண் டெனவே வனைந்தான் உயிர் ஒன்றினுக்கு'
(திருப்பதிக்கோவை. 325)

21. 'ஆவியொன் றுடலிரண்டாயது'(கம்பர்.சுந்தர.அட்சய.44)

இருதலைப்புள்.

1. 'இருதலைப் புள்ளின் ஒருயிரே ணுதலாற் பிரிவும் வரவும்
வினவும் செப்பும் நம்மிடை உளவாகா.'
(பரிபா. 8:-72-3 உரை.)

2. 'ஒருயிர்ப் புள்ளின் இருதலை' (கலி. 89)

3. 'இருதலைப் புள்ளின் ஒருயிராய உழுவலன்புடைய
எமக்கு வேண்டா' (குறள். 1109. பரி. உரை)

4. 'யாம் இருதலைப் புள்ளின் ஒருயிரேமாதலின்,
காதலாள் உயிர் நீங்கின் என் னுயிரும்
ஏத மெய்தி நிற்கும்' (சிங். 1631. உரை)

5. 'இருதலைப் புள்ளின் ஒருயி ரேனுகிய யான்'
(திருக்கோவையாருரை. 12.)

6. 'ஒருகுடற் படுதர வோரிரை துற்றும்
இருதலைப் புள்ளி னோருயிர் போல' (கலி.89. அடிக்குறிப்பு)

7. 'பிரிவரும் புள்ளின் ஒருமையின் ஒட்டி' (பெருங்.2,14:-66)

8. 'ஒருயிர்த்தாய்
இருதலைப் புள்ளின் இயைந்தநுங் கேண்மையையெண்ணி'
(தஞ்சைவாணன். பா. 257)

9. உள்ளத் துவகையொருதலைப் பட்ட இருதலைப்பைம்
புள்ளொத் தினிய புதுமலர்ப் பாயற் புணர்ந்தஇன்ப
வெள்ளக் கடலிடை வீழ்ந்துட னீந்துவர் மெய்ம்மறந்து
வள்ளக் கமல வளவய லூரனு மாதநுமே'
(அம்பிகா. கோவை. 460)

10. 'ஒருதலைச் சேவற் சிறைக்கே யடங்கிய வோதிமப்பே
டிருதலைப் புள்ளென லாம்பனிக் காலத் திருகரையும்
பொருதலைக் கும்பொன்னி யாரூர்த் தியாகர்பொருப்பி
[லன்பர்
வருதலைக் கண்டுநான் உய்வகைக் கூறும் வலம்புரியே'
(திருவாரூர்க். 483.)

11. 'ஒருவா இருதலைப் புட்போல் நமக்குயிர் ஒன்றெனமுன்
திருவாய் மலர்ந்தருள் செய்தநங் காதலர் செம்பொருட்கா
வெருவாது கான்சென் றுழிமறந் தெம்மைவிடுவர்கொலோ
வருவாரிக் காரிற் கலைசைத் தியாகர் வரையகத்தே'
(கலைசைக்கோவை. 287)

12. 'இருதலைப்புளி னுற்றவோ ருயிரென்ன நம்முடனுகியே
மருவுதுன்பமு மின்பமும் வழுவாதுதுய்த்திடுமாட்சியேன்'
(கலி. 89. அடிக்குறிப்பு)

13. 'இருதலைசே ரொருபுள்ளின் ஏகவுயிராய் நீவிர்
மருவியிடர் அறியாமே வாழுநாள்' (கலி. 89.அடிக்குறிப்பு)

14. 'ஒன்றும் இருதலைப் புள்ளின் இருவர்க்கும் ஒருயிரே'
(திருவாவடுதுறைக். 291)

ஆசிரியர் நச்சினார்க்கினியர் இரவும் பகலும் வாரல் என்றதற்கெடுத்துக் காட்டாக 'நல்வரைநாட நீவரின், மெல்லியலோருந் தான்வாழலளே' என்னும் அடிகளைக் கொண்டார். (தொல். பொருளியல்.16 உரை.) அவற்றையே, ஆசிரியர் பேராசிரியரும் எடுத்துக் காட்டித், 'தலைமகள் குறிப்பினைத் தோழி கூறியதாகலான் அஃது அவன் புணர்வு மறுத்தலெனப்படும். 'இஃது ஒன்றித் தோன்றுந் தோழிமேன' என்னும் இலக்கணத்தால் தோழி குறிப்பாயினுந் தலைமகள் குறிப்பெனவேபடுமென்பது கொள்க (தொல். மெய்ப். 23. உரை) என்றெழுதினர். 'செத்து' என்பது உவம வாய்பாடாதற்குப், 'புலிசெத்து வெரீஇய புகர் முகவேழம்' என்ற அடியை மேற்கொண்டனர். (தொல். உவம. 15. உரை.)

'பிரிவின் றியைந்த துவரா நட்பு' என்பதில் இன்றி என்னும் வினையெச்சத் திறுதியிகரம் உகரமாயிற்று.

'இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகரம் ஆதல்
தொன்றியல் மருங்கிற் செய்யுளுள் உரித்தே.'

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'பலவின் பழுப்பயங் கொண்மார், குறவர் ஊன்றிய குரம்பை' என்பதில் 'கொண்மார்' என்பது 'ஊன்றிய' என்னும் பெயரெச்ச வினையைக் கொண்டு முடிந்தது. (நன்னூல். 327. சூ. உரை.)

'மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியு மென்ப'

என்பது தொல்காப்பியம்.

ஆசிரியர் இளம்பூரணரும் சேனவரையரும் நச்சினார்க்கினியரும் மாரீறு பெயரொடு முடியாதென்றனர். தெய்வச்சிலையாரும் மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயரும் பெயரொடும் முடியும் என்றனர்.

பாடன்மார் என்பது பாடுவார் என்னும் ஆரீற்று முற்றுச் சொல்லின் எதிர்மறையாய் ஒருமொழிப் புணர்ச்சியான் மகரம் பெற்றுநின்றது என்பது சேனவரையர் கருத்து. பாடுக என்னும் வியங்கோட்கு எதிர்மறையென்பது நச்சினார்க்கினியர் கருத்து.

கபிலர் வரலாற்றைப் புறநானூறு முதலியவற்றிலும், பெரும் புலவர்களாகிய உயர் திருவாளர்கள். வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்களும், ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்களும் எழுதிய ஆராய்ச்சி நூல்களிலுங் காண்க.

---

# திருவாசகத்தே "நமச் சிவாய வாஅழ்க" என்ற அகவல் பாவின் ஆய்வு

திருவாளர். வே. மு. சீனிவாச முதலியார் அவர்கள், காஞ்சீபுரம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

அப்பா, "கலிவெண்பா" அல்லை. அது "அகவல்பாவே."
அவ்வேதுவினைக் கடையில் காண்க.

இவ்வாய்வினைப் பற்றிய மனம் மாற்றம் உடைய அறிஞர்கள், தம் எண்ணத்தினை இவ்வாய்வு முற்றும் வெளிப்பட்ட பின்னர், "ஆக்கமும் கேடும் அதனால் வருதலால், காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு." என்ற தேவர் தம் திருமொழியை மறவாமல் நேரிய முறையில் வெளியிடுவார்கள் என யான் நம்புகின்றேன்.

1. **நமச்சிவாய வாஅழ்க. நாதன் தாள் வாழ்க.**—வணக்கம் சிவபெருமானுக்கு என்னும் திருமந்திரம் வாழ்தல்வேண்டும். அத்திருமந்திரத்தின் தலைவனாகிய, சிவபெருமானுடைய திருவடிகள் வாழ்தல்வேண்டும்.

வாழ்க என்றதன் ககர ஈறு, வியங்கோள் விகுதி. அது வேண்டுதல் பொருளைச் சுட்டிற்று. வாழ்க என்ற ஏனைய நான்கு இடங்களினும் வாழ்தல் வேண்டும் என விரித்துக் கொள்ளுக.

2. **இமைப்பொழுதும் என் நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க.**—கண் இமைத்தலாகிய கால அளவும் என்னுடைய மனத்தின் நின்றும் அகலாதவன் ஆகிய சிவபெருமானின் திருவடிகள் வாழ்க.

3. **கோகழி ஆண்ட குரு மணி தன் தாள் வாழ்க.**—திருக்காழி என்னும் திருப்பதியினைத் தனக்கு ஆட்சியாகக்கொண்ட மாணிக்க மணிபோலும் செம்மேனியான் ஆகிய சிவபெருமானின் திருவடிகள் வாழ்க.

கோகழி என்றமொழி திருவாவடுதுறை என்ற திருப்பதிக்கு ஒரு பெயர் என்பார் கூற்றுப்பொருத்தம் அன்று. அதன் ஏது மேல்வருமாறு—திருவாதவூர் அடிகள், தம்மால் ஆக்கப்பட்ட திருவாசகத்து இடையேயும், திருக்கோவையார் இடையேயும், ஓர் இடத்தும் திருவாவடுதுறை என்னும் திருப்பதியைக் குறித்திலர். அவர்கள் அந்நூற்கள் இடையே வேறு பல திருப்பதிகளைக் குறித்தார்கள். அப்பல திருப்பதிகளுள், திருவிடைமருதூர் என்னும் திருப்பதியும் ஒன்றாகும். அத் "திருவிடைமருதூர்" என்ற திருப்பதியினை மிக அடுத்து இருப்பதுவும், திருச் சைவாசிரிய ஆதீனத்தார் இருக்கைக்கு இடமாக இருப்பதுவும் ஆகிய, சிறப்பினை உடைய "திருவாவடுதுறை" என்னும் திருப்பதியினை அதன் உறழ்ச்சிப்பெயர்களுள் ஒன்றனைக்கொண்டும் அடிகள், அந்நூற்கள் இடையே ஓர் இடத்தும் குறித்திலர். ஆதலால், அடிகள், தம்மின், முன் ஆசிரியர்களால் நூல்வழக்கினும், உலக வழக்கினும் ஆளப்படாததும், தம்மால் புதிதாக ஆக்கப்பட்டதும் ஆகிய, "கோகழி" என்ற மொழியினைத் தம்

நூற்கள் இடையே தம்மால் ஓர்இடத்தும் குறிப்பாகவும்,சுட்டப் படாத "திருவாவடுதுறை" என்னும் திருப்பதிக்குப் பெயர் ஆக ஆண்டார்கள் எனல் பொருத்தம் அன்று.

திருவாதவூர் அடிகளின் பிற்காலத்தே (திருவாசகத்தே குறிக்கப்பட்ட "கோகழி" என்ற புதிய மொழியினுக்குப் பொருள் விளங்காது மயக்கங் கொண்ட காலத்தே) திருவாவடு துறையின், திருச் சைவாதீனத்து ஆசிரியர்கள், தாங்கள் எழுதிய நூற்கள் இடையேயும், பாக்கள் இடையேயும், கோகழி என்ற மொழியினைத் தங்கள் இருக்கையாகிய திரு வாவடுதுறை என்னும் திருப்பதியினுக்குப் பெயராக ஆண் டார்கள். அவர்கள், (திருவாதவூர் அடிகளால் ஆக்கப்பட்ட திருவாசகத்தே அன்றி) திருவாவடுதுறை ஆதீனத்து ஆசிரியர் களின் முற்காலத்தே எவராலும், எந்நூல் அகத்தும் ஆளப் படாதது ஆகிய அக்கோகழி என்ற மொழியினைத் திருவாவடு துறை என்னும் திருப்பதியினுக்குப் பெயர் ஆகக் கொண்டது என்னை எனின் தங்கள் ஆதீனத்து இருக்கையாகிய ஊரினைத் திருவாதவூர் அடிகளும், தம் நூலிடையே சிறப்பாக எடுத்து உரைத்தார்கள் என்ற பெருமையினைத் தாங்கள் பெறுதல் பொருட்டுப் போலும். நிற்க,

கோகழி என்ற மொழியினைத் திருப்பெருந்துறை என்னும் திருப்பதியினுக்குப் பெயர் என்று திருவாசகத்தினைப் பலவாக ஆய்ந்து ஆங்கில மொழியாலும் பதிப்பித்த காலம் சென்ற பாதிரியார் ஸ்ரீமத். ஜீ. யூ. போப் துரை அவர்களும், திருவாசகத்துக்கு (முதல் நான்கு நெடும்பாக்கட்குமட்டும்)உரை எழுதிய தமிழர்களுள் ஒருவரும் ஆகிய இருவரும் எழுதினார்கள். அவர்களின் எழுத்துக்கள் ஏற்புடையன அல்ல. அதன் ஏது மேல் வருமாறு—அடிகள், திருவாசகத்தே திருப்பெருந்துறை என்னும் திருப்பதியை ஒருபாவில் குறிப்பார்கள் ஆயின் திருக் காழி என்னும் திருப்பதியின் உறழ்ச்சிப் பெயர் (திரிசோல்) ஆகிய கோகழி என்ற பெயரையும் அப்பாவில் குறிப்பார்கள். கோகழி என்ற பெயர் திருப்பெருந்துறை என்னும் திருப்பதியின் உறழ்ச்சிப்

பெயர்களுள் ஒன்று அன்று. அன்றி, கூறியது கூறல் என்னும் குற்றமும் இன்று ஆதலால், திருக்காழி என்னும் திருப்பதியை ஒரு பாவில் குறிப்பார்கள் ஆயின் அதன் உறழ்ச்சிப் பெயர் (திரிசொல்) ஆகிய கோகழி என்ற பெயரை அப்பாவில் குறியார்கள். குறிப்பின் கூறியது கூறல் என்னும் குற்றம் ஆகும் ஆதலால், அவ்வழக்கினை இப்பாவில் "கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க." என்று திருக்காழித் திருப்பதியைக் குறித்தபடியால் அதன் உறழ்ச்சிப் பெயர்களாகிய கழுமலம், சிவபுரம், தோணிபுரம் முதலிய பெயர்களுள் ஒன்றனையும் குறித்திலர். அதனாலும், கீர்த்தித் திரு அகவலுள் "கழுமலமதனில் காட்சி கொடுத்தும்" என்று திருக்காழியின் உறழ்ச்சிப் பெயர் ஆகிய கழுமலம் என்ற பெயரைக் குறித்தபடியால், மற்றும் அதன் உறழ்ச்சிப் பெயர் (திரிசொல்) ஆகிய கோகழி என்ற பெயரைக் குறியாமையாலும், போற்றித் திரு அகவலுள், "கோகழி மேவிய கோவே போற்றி" என்று திருக்காழித் திருப்பதியின் உறழ்ச்சிப்பெயர் (திரிசொல்) ஆகிய கோகழி என்ற பெயரைக் குறித்தபடியால், மற்றும் அதன் உறழ்ச்சிப் பெயர்களாகிய கழுமலம், சிவபுரம், தோணிபுரம் முதலிய பெயர்களுள் ஒன்றனைக் குறியாமையாலும், இப்பாவில், "சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி" என்றும், கீர்த்தித் திரு அகவலுள் "திருவார் பெருந்துறைச் செல்வனாகி" என்றும், போற்றித் திரு அகவலுள் "பராய்த் துறை மேவிய பரனே போற்றி" (பாராய்-பெருமை; விகாரம்) என்றும், குறித்தமையாலும் அறிக. இவ்வேதுக்களினால், அடிகள், கோகழி என்ற பெயரால் திருப்பெருந்துறை என்ற திருப்பதியினைக் குறித்தார்கள் எனல் பொருத்தம் அன்று.

அன்றி, திருவாசகத்தே பண்டாய நான் மறைப் பகுதியுள் "நண்ணிப் பெருந்துறையை நம் இடர்கள் போய் அகல, எண்ணி எழு கோகழிக்கு அரசைப்—பண்ணின் மொழியாளோடு உத்தர கோச மங்கை மன்னிக், கழியாது இருந்தவனைக் காண்." என்று ஒரே வெண்பாவில் திருப்பெருந்துறை, கோகழி, உத்தர கோச மங்கை, என்ற மூன்று திருப்பதிகளை அடிகள் குறித்தார்கள்.

அப்பாவின் பொருள்—நெஞ்சே! நம்முடைய துன்பங்கள் கெடும் பொருட்டுச் சூழ்ந்து (யோசித்து) சென்று திருப்பெருந் துறை என்னும் திருப்பதியை அடைந்து அவ்விடத்தே எழுந் தருளிய கோகழி (திருக்காழி) என்னும் திருப்பதிக்குத் தலைவ னும், திருஉத்தர கோச மங்கை என்னும் திருப்பதியின்கண் பண்போலும் இனிய மொழியாளோடும் பொருந்தி நீங்காமல் இருப்பவனும் ஆகிய இறைவனைக் கண்டு வணங்குவாயாக.'' என்பதாம். ஆதலால், கோகழி என்ற மொழியைத் திருக்காழி என்ற திருப்பதிக்குப் பெயராகக் கொள்ளாமல் திருப்பெருந்துறை என்ற திருப்பதிக்குப் பெயர் எனின் கூறியது கூறல் எனும் குற்றம் ஆம். ஆகையால், அது கவிக்கருத்து அன்று.

திருவாசகத்தே பண்டாய நான்மறைப் பகுதியுள் முதற் பாவில் கோகழி என்ற திருப்பதியைக்கூறி அப்பகுதி முற் றும், (ஏனைய பாக்கள் ஆறினும்) திருப்பெருந்துறை என்ற திருப் பதியைக் குறித்தபடியால் அம்முதற்பாவில் குறிக்கப்பட்ட கோகழி என்ற பெயர் திருப்பெருந்துறை என்ற திருப்பதியைக் குறித்தபடியாம் என்றும், அதனால்,'நண்ணிப் பெருந்துறையை' என்ற பாவில் குறிக்கப்பட்ட பெருந்துறை என்ற மொழி ஒரு திருப்பதியின் பெயர் என்றும், அப்பாவில் குறிக்கப்பட்ட கோகழிக்கு அரசு என்ற பெயர் அத்திருப்பதியில் எழுந்தருளிய இறைவனைக் குறித்தபடி என்றும், ஒருவர் கூறினர். (மாத வெளியீடு. சித்தாந்தம். மலர் மூன்று. இதழ் எட்டு.) அந்“நண் ணிப் பெருந்துறையை என்ற பாவின் பிற் பகுதியில் “உத்தர கோச மங்கை மன்னிக் கழியாது இருந்தவனைக்காண்'' என மூன் றுவதாகக் குறிக்கப்பட்ட ஒரு திருப்பதியினை அவர் படித்திலர் போலும். அவர் தம் கூற்றுப் பொருந்தாது என்பதனை மேல் வரும் ஏதுக்களால் அறிக.

திருவாசகத்தே பண்டாய நான்மறைப் பகுதி முற்றும் “திருப்பெருந்துறை, கோகழி, உத்தரகோசமங்கை'' என்ற மூன்று திருப்பதிகளையே குறித்தாற்போல குயில் பத்திலும், முற்றும் பிற திருப்பதிகளைக் குறியாமல், “திருப்பெருந்துறை, கோகழி,

உத்தரகோச மங்கை'' என்ற மூன்று திருப்பதிகளையே அடிகள் குறித்தார்கள். அக்குயில் பத்தில் குறிக்கப்பட்ட "உத்தரகோச மங்கை'' என்ற பெயரையும், பண்டாய நான்மறைப் பகுதியில் குறிக்கப்பட்ட "உத்தரகோச மங்கை'' என்ற பெயரையும், திருப் பெருந்துறை என்ற திருப்பதிக்கே பெயராகக்கொள்ளல்வேண்டும் அன்றோ? அப்படிக் கொள்ளுதல் நேர்மை அன்று ஆதலால் திருவாசகத்தே பண்டாய நான்மறைப் பகுதியுள் முதற்பாவில் குறிக்கப்பட்ட கோகழி என்ற மொழியைத் திருப்பெருந்துறை என்ற திருப்பதிக்குப் பெயர் எனல் பொருத்தம் அன்று.

அடிகள், பண்டாய நான்மறைப் பகுதி முற்றும் "பெருந் துறை, கோகழி, உத்தரகோசமங்கை என்ற மூன்று திருப் பதிகளையே குறித்தார்கள். அன்றி, அப்பகுதியுள் "நண்ணிப் பெருந்துறையை'' என்ற ஒரே பாவிலும், திருப்பெருந்துறை, கோகழி என்ற இரண்டு பெயர்களோடு மூன்றுவதாக "உத்தர கோசமங்கை''என்ற ஒருபெயரையும் குறித்தார்கள். அப்படியே குயில் பத்திலும், முற்றும் பிற எத்திருப்பதியினையும் குறியா மல், திருப்பெருந்துறை, கோகழி, உத்தரகோசமங்கை என்ற மூன்று திருப்பதிகளையே குறித்தார்கள். திருவாசகத்தே பிற பகுதிகளிலும், இம்மூன்று பெயர்களைப் பல முறைக் குறித் தார்கள். ஆதலால், அடிகட்கு வேறு பல திருப்பதிகளினும், திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, கோகழி(திருக்காழி) என்ற மூன்று திருப்பதிகளிடத்தும் மிக விருப்பம் போலும்.

கோகழி என்றமொழி திருப்பெருந்துறை என்ற, திருப் பதியின் பெயர் என்பார் கூற்றுப் பொருத்தம் அன்று என்ப தற்கும், கோகழி என்ற பெயருக்குத் திருக்காழி என்ற திருப் பதியே பொருள் என்று கூறுதற்கும்—உரிய, பல ஏதுக்கள் உள்ளும், திருவாசகத்தே பண்டாய நான்மறைப் பகுதியுள் "நண்ணிப் பெருந்துறையை'' என்ற பாவின் குறிப்பே சாலச் சிறந்த ஏதுவாகும் என்பதனை நடுநின்று ஆயும் நல்ல அறிஞர் அறிவர்.

அடிகள், திருக்காழி என்ற திருப்பதியினைக் காழி என்ற பெயரால் திருவாசகத்தே ஓர் இடத்தும் குறித்திலர் ஆதலால்,

கோகழி என்ற பெயருக்குத் திருக்காழி எனப்பொருள் கூறுதல் பொருத்தம் அன்று என்றார் ஒருவர். (சித்தாந்தம். மலர்மூன்று. இதழ் எட்டு.) அவர், யான் திருவாவடுதுறைஎன்ற திருப்பதியினை அடிகள், தம்மால் ஆக்கப்பட்ட நூற்கள் இடையே ஓர் இடத்தும் குறித்திலர் என்றதற்கு எதிராகக் காழி என்ற பெயரால் திருக்காழி என்ற திருப்பதியை அடிகள் திருவாசகத்தே ஓர் இடத்தும் குறித்திலர் என்றார் போலும். அவர் தம் கூற்றுப் பொருந்தாமையை மேல்வரும் ஏதுக்களால் அறிக—திருவாசகத்தே சிவபுரம், கழுமலம், ஆழி (காழி) என்று அடிகள் குறித்தார்கள். ஆதலாலும், சிவ புரம், கழுமலம், ஆழி (காழி) என்ற பெயர்கள் திருக்காழி என்ற திருப்பதிக்குப் பெயர்களாக இருத்தலாலும், அடிகள், காழி என்ற பெயரையே ஆழி எனத் திரித்துக் குறித்தார்கள் எனக் கொள்ளுக.

காழி என்ற மொழியை ஆழி எனத் திரித்துக்கொள்ளுதல் பொருத்தம் ஆமோ எனின், ஆம் பொருத்தமே. அவ் வேதுவினை மேல்வரும் ஏதுக்களால்அறிக.—இப்பாவில் "உந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்ற அடியில் முந்தை என்ற மொழியை மொழி முதல் மெய் கெடுத்து "உந்தை" என ஆண்டது போல, அடைக்கலப்பத்தில் பா ஆறில் திருக் காழித் திருப்பதியில் எழுந்தருளிய இறைவனை (தோணி) அப்பர் என்னும் சிறப்பு வழக்குப்பற்றி (ஆழி (காழி) அப்பா என) "ஆழி அப்பா உடையாய் அடியேன் உன்அடைக்கலமே" என்று, காழி என்ற பெயரை மொழி முதல் மெய்கெடுத்து ஆழி எனத் திரிசொல் வழக்கில் அடிகள் குறித்தார்கள். காழி என்ற மொழியை ஆழி எனத் திரித்தது ஆன்றோர் வழக்குப் பற்றியே யாம். அவ்வழக்கினை—மலர் என்பதனை அலர் என்றும், கேதம் என்பதனை ஏதம் என்றும், மேழம் என்பதனை ஏழம் என்றும், மும்மை என்பதனை உம்மை என்றும், மேனகை என்பதனை ஏனகை என்றும், மெல்லோதி என்பதனை எல்லோதி என்றும், ஈரம் என்பதனை ஈரம் என்றும், ஆன்றோர்

நூற்கள் இடத்தும் உலக வழக்கு இடத்தும் குறிக்கப்படுதலால் அறிக.

அடிகளும் அவ்வழக்குப் பற்றியே காழி என்னும் மொழியை ஆழி எனத் திரித்தார்கள். அன்றி, இப்பாவில் "உந்தைவினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்ற அடியில் "முந்தை" என்ற மொழியை உந்தை எனவும், அச்சப்பத்தின் பா, ஆறிலும், பா, பத்திலும் மாண்பு என்ற மொழியின் பகுதியாகிய மாண்—மாள் என்ற மொழியை முறையே ஆள் எனத்திரித்து "ஆள் அலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்றும், ஆண் எனத்திரித்து "ஆண் அலாதவரைக் கண்டால்அம்ம நாம்அஞ்சுமாறே"எனவும், ஆண்டார்கள். காழி என்றமொழியை ஆழிஎன்றும்,முந்தை என்றமொழியை உந்தை என்றும், மாண் என்றமொழியை ஆள், ஆண் என்றும், அடிகள் திரித்துக்கொண்டது என்னை எனின், மோனைத்தொடை முரணுமைப்பொருட்டேயாம். ஆதலால்அடிகள், திருவாசகத்தே காழி (ஆழி) என்ற பெயராலும் திருக்காழி என்ற திருப்பதியினைக் குறித்தபடியாம். இவ்வேதுக்களினால், அடிகள், காழி என்ற பெயரால் திருக்காழி என்ற திருப்பதியினைக் குறித்திலர் என்பார் கூற்றுப் பொருத்தம் அன்றாம். காழி என்ற பெயரால் திருக்காழித் திருப்பதியை குறியாவிடினும் குற்றம் ஒன்றும் இன்று. அத்திருக்காழித் திருப்பதியின் உறழ்ச்சிப் பெயர்களாகிய கழுமலம், சிவபுரம், என்ற பெயர்களைக் குறித்தபடியால்.

கோகழி என்ற மொழி திருக்காழி என்னும் திருப்பதிக்குப் பெயர் ஆமோ எனின் ஆம். அதன் ஏது மேல் வருமாறு—திரு என்னும் மொழி பெருமை என்னும் பொருளை உணர்த்துவது போலபெருமை என்னும் பொருளை உணர்த்துவது ஆகிய "கோ" என்னும் உரிச்சொல் காழி என்றமொழி முன்கூடி (கோ+காழி) கோகாழி, குறுக்கும்வழி குறுக்கப்பட்டு கோகழி என ஒருசொல் நீர்மைத்தாய் நின்று "பெருமை பொருந்திய காழி" எனப்பொருள் சுட்டியபடியாம். அன்றி, வளம் என்னும் பொருள் உணர்த்துவது ஆகிய "கொழு"

என்னும் உரிச்சொல் காழி என்னும் மொழி முன் கூடி (கொழு + காழி) கொழுக்காழி — மரூஉவின் பாத்தியாய்க் கோகழி என ஒரு சொல் நீர்மைத்தாய் நின்று "வளமுடைய காழி" எனப் பொருள் சுட்டிய படியும் ஆம். திருக்காழித் திருப்பதியை வளமுடைய காழி நகர் என்று சிறப்பித்துக் கூறுதலைத் திருத்தேவாரத்தேயும் காண்க. இவ்வேதுக்களில், கோகழி என்ற மொழியைத் திருவாவடுதுறை என்னும் திருப்பதிக்கேனும், திருப்பெருந்துறை என்ற திருப்பதிக்கேனும் பெயராகக் கூறுபவர் கூற்றுப் பொருத்தம் அன்று. அக்கோகழி என்ற மொழியைத் திருக்காழி என்னும் திருப்பதிக்கே பெயராகக் கூறுதல் தான் பொருத்தமும் கவிக் கருத்தும் ஆம்.

4. **ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.**— ஆகமங்கள் வடிவாகி அவற்றைக் கற்பாரின் நெஞ்சின் நின்று இனிப்பான் (இன்பத்தை ஊட்டுவான்) ஆகிய சிவபெருமான் உடைய திருவடிகள் வாழ்க.

"ஆலைபடு கரும்பின் சாறுபோல அண்ணிக்கும், அஞ்சு எழுத்தின் நாமத்தான்காண்" (திருநாவு— தேவா— திருவீழி— திருத்தா.) என்றும், "ஆன அஞ்சு எழுத்தும் ஓத வந்து "அண்ணிக்கும் தேன்" (திருநாவு — தேவா— திருநாகே— திருக்.) என்றும் குறிக்கப்பட்ட உவமைச் சுட்டுக்களால், அண்ணிப்பான் என்றதற்கு அணுகி நிற்பான் எனல் பொருத்தம் அன்று. இனிப்பான் (இன்பத்தை ஊட்டுவான்) எனலே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆம்.

5. **ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க.**—உலகம் முற்றும் நிறைந்து நிற்றலால், ஒருவன் ஆகவும், பொருள் விகற்பத்தால் பல வடிவன் (ஐம்பெரும் பூதம், இருசுடர், இயமான்) ஆகவும், இருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகள் வாழ்க.

சிவபெருமான் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கட்கும்உரிய இறைவர்களாக இருத்தலாலும், அநேகன் என்றார் எனலாம்.

6. **வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க.**—விருப்பின் பொருட்டும், வெறுப்பின் பொருட்டும், விரைந்துசெல்லும் என்னுடைய மனத்தின் விரைவினை அழித்துத் தன் திருவடிக்கண் நிறுத்தி என்னை அடிமைகொண்ட இறைவனுடைய திருவடிகள் வெற்றியை உடைத்தாய் இருத்தல்வேண்டும்.

வெல்க என்றதன் ககர ஈறு, வியங்கோள் விகுதி. அது வேண்டல்பொருளைச் சுட்டிற்று. வெல்க என்ற ஏனைய நான்கு இடங்களினும், வெற்றியை உடைத்தாய் இருத்தல்வேண்டும் என விரித்துக் கொள்ளுக.

(தொடரும்.)

# வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 9, பக்கம் 343)

**எழினி:—(வியப்பும் துக்கமும் தோன்ற)** ஆ! என்ன! என் நண்பன் 'தகடூர் நாயகன்' இறந்தாபட்டான்! இச்செய்தியை யான் அறியேனே! என்ன! இவ்வுலகவாழ்க்கை! கல்வி நிறைவும் பெருந் தன்மையும், மனவலியும் அளித்த மாக்கருணை, ஏனோ அவற்கு இவ்வுலக வாழ்க்கையைத் தந்திலது..........அவன் செயலை எவர் அறிவர். பின்னர் என்ன நிகழ்ந்தது?

**அம்பலவாணர்:**—பெரும! மன்னன் மண் நீத்த அன்றே, அவரது கற்புடைத் தேவியும் அவருடனேயே விண்ணுடு சென்றாள். அவர்கட்குப்பின், எங்கட்கு, நாடாள்வார் எவரும் இன்மையால், குடிமக்களுள் பிளவு ஏற்பட்டு, நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற, அவரவரும் முயலுகின்றனர். தனியாட்சி யின்மையால் தான் தோன்றிகளாய பல தரிதலைகளினால் ஏற்படும் இன்னல்கட்கு அளவேயில்லை. நாட்டின் நலங்கருதி யாங்கள் கொண்ட

முயற்சிகள் அனைத்தும் விழலுக்கு இறைத்தநீராயின. ஆதலால், அருள்வடிவாய அண்ணலே! தாங்கள் எம்முடன் போந்து, எம் மூரிலுள்ள இழிதகவுடைய அறிவற்ற சிற்றினஞ் சூழ்பவரை அடக்கி, நாட்டில் அமைதியை நிலவவேண்டும், என்ற விண்ணப்பமே முதலாவதாகும். மன்னுயிரனைத்தையும் தன்னுயிரென மதிக்கும் மாண்புடை இறைவனே! தாங்கள் அமைதியை நிறுவி ஆண்டிருந்து ஆட்சியைச் செலுத்தாவிடில், மறுபடியும், அம்மதியிலாமக்களால் கலாம் பலவிளையும் என்பது உறுதி. ஆதலால் எங்கள் வேண்டுகோட்கிரங்கி, தங்களது அரசிருக்கையாகத் தகடூரைக் கொண்டு, இடர்ப்படும் எங்களையும் புரந்து, அருளல் வேண்டும், என்பது வேறொன்றாகும்.

**கிளிவண்ணன்:**—நிறைமதிச் செல்வ! இங்கு எம்முடன் வந்த இவ்வம்பலவாணரே, எங்கள் ஊரின் தலைமைப் பெருங் குடியினிற் பிறந்த முதல்வர் ஆவர். அன்னவரே இதுபோது எங்கட்கு உற்ற பெருந்துன்பங்களையெல்லாம் துடைப்பதற்கு முயன்று வருகின்றார். எம் நாட்டு ஆன்றோர் பலரும், அவர் வழியே நிற்பர். ஆதலால் தாங்கள் அவரது வேண்டுகோட் கிணங்கி எம்மைப் புரக்க அருள்புரியுமாறு வேண்டுகின்றேம்.

**தகடூர் நகர்முதல்வன்:**—மாண்புநிறை மன்ன! இங்குள்ள அம்பலவாணரும் அவர் தம் நட்பிற்குரியவராக நிற்கும் இக்கிளி வண்ணனும் எங்களூரின் உயிரும், உடலும்போன்றவர் ஆவர். உடலுக்குற்ற பிணிபோல, எம் தலைவன் 'தகடூர் நாயகன்' மறைவிற்குப்பின், எங்கள் நகரில் குழப்பமும் சீர்கேடும் தோன்றியுள்ளன. தக்க மருத்துவராய தலைவர் இல்லாது தவிக்கும் எங்கட்கு, வாணாள் வளர்ச்சியை மிகுக்கும் மருத்துவ நாதரையொப்பத் தாங்கள் இருக்கின்றீர்கள். தங்கள் துணைவலி எங்கட்கு என்றும் வேண்டற்பாலதேயாம். ஆதலால், தாங்கள் எங்கள் எளிய வேண்டுகோட்கு மறுத்துரைக் காது, மனம் கொள்ளும் வண்ணம், பலகாலும் எம் நகர் குடிமக்கள் சார்பாக நாங்கள் தங்களை இன்று இறைஞ்சுகின்றேம்.

**எழினி:**—தகடூர் மக்களே! நீங்கள் கூறிய அனைத்தும் எம் கருத்துக்கு வந்தது. யானும் உங்கட்கு ஒரு சிறிது கடமைப்

பட்டுமுள்ளேன். உங்கள் தலைவன், தகடூர்நாயகன் சேரமரபின் தொடர்புடையவன்: யானும் அவ்வாறே அம்மரபில் வந்தவன். மேலும், அவன் எனது உழுவலன்பனும் ஆவன். ஆதலால் அவன் நாட்டிற்கு எற்பட்ட இன்னல்கள் பலவும், இவ்வதிகை நாட்டிற்கும் ஏற்பட்டதே போன்றதாகும். நீவிர் அனைவிரும் அதற்காகக் கவலற்க. உங்களுடன் எம் நாட்டு அணித்தலைவரை இன்னே அனுப்புவேம். அவரைக்கொண்டு நீவிர் ஆவன விரைவிற் செய்யுங்கள்: யாமும் அவண் விரைவில் இருப்போம்.

அம்பலவாணர்:—வாழிய, வள்ளால், வாழிய நின்னருள்! யாவும் தங்கள் அருள் மொழிப்படி, இனிதே எய்துக.

எழினி:—எடா! வாயிற் காவல. நீ விரைந்து சென்று நம் அணித் தலைவரை இங்கு அழைத்துவருக.

காவலன்:—தங்கள் திருமொழிப்படி (வணங்கிச்செல்லுதல்)

எழினி:— அம்பலவாணரே! யான் உங்கள் தலைவனுதற்கு உரிய துணையாவும் நும் போன்ருராலே செவ்விதில் அமையுமெனக் கருதுகின்றேன். எனெனில் நாட்டின் அமைதியைப் பெரிதும் கருதியுள்ள உங்களைப் போன்றவர்களாலே தான், அதன் நலங்கள் யாவும் புரக்கப் படுவதோடு, அதற்குவேண்டிய அமைதிகள் யாவும் நிலை நிறுத்த வியலும்.

அம்பலவாணர்:— பெருந்தகையாள எங்களது தொண்டு, தங்கட்கு என்றும் உளதாகும். தங்கட்கு துணையாக, யாங்கள் அனைவரும் ஒருமுகமாகக்கூடிநின்று, எங்களது உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அளிப்போம். நாட்டின் நலங்கான யாங்கள் எத்தகைய துன்பமும் ஏற்றுக்கொண்டு, அதன் முற் போக்கிலீடுபட்டு உளமார ஒத்துழைக்க எத்துணையும் பின் வாங்கோம். பெரும! யாங்கள் கூறும் இஃது என்றும் உறுதியே.

எழினி:— நன்று அவ்வாறே ஆகுக!! (காவலனை நோக்கல்)

காவலன்:—(வணக்கமாக) மன்னர்பெரும! நம் அணித் தலைவர் இதோ வருகின்றூர். (அணித்தலைவர் அவையிற்போந்து அதிகனை வணங்குதல்.)

அணித்தலைவர்:— (பணிவுடன்) எம்பெரும! போற்றி! எளியாரின் துணையே, போற்றி!! தாங்கள் எளியனைக் கருதியது எதற்கோ? அறியேன்.

எழினி:— கருணாகர! நீ விரைந்து நம்படையோடு இவ்வம்பலக் கூத்தருடன் தகடூர் சென்று, அங்கு, கலகம் மிகுந்த இடங்களை யறிந்து, மக்கட்குச் சேதமின்றிக் குழப்பத்தை யடக்க, வேண்டுவன புரிமின்!

அணித்தலைவன்:— தங்கள் கருத்துப்படியே ஆவன புரிகின்றேன். வணக்கம் பெரும! சென்று வருகிறேன்.

எழினி:— அம்பலக் கூத்தரே! கிளிவண்ணனாரே! குடிமக்களே! நீங்கள் அணித்தலைவர் கருணாகரரைக் கொண்டு நகரின் நலத்தை நாடுங்கள். யாமும் ஒல்லையில் அவண் வருவேம். சென்று வாருங்கள். கவலை சிறிதும் கொள்ளற்க: அறமே என்றும், வெற்றிபெறும். (யாவரும் நின்றுபணிதல்.)

இயல். க—காட்சி உ. முடிவு.

# மதிப்புரை

நாநார்த்ததீபிகை:—இது சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் 6-வது தமிழ் வெளியீடு. 80 ஆண்டுகளின் முன்னர் திருநெல்வேலியிலிருந்த தமிழ்ப்புலவர் கவிராயர் முத்துசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய நிகண்டு. தமிழ்மொழி ஆராய்ச்சிக்கு இன்றியமையாத கருவி நூலாகும். இதன் விலை ரூ. 6—0—0.

பங்கயச்செல்வி அல்லது வீரக்காதல்:—இது திருக்கோவலூரில் Revenue Divisional Officer ஆக இருக்கும் திரு. K. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் B. A., இயற்றிய துன்பியல் (Tragady) நாடகநூல். மெய்ச்சரிதத்தைத் தழுவி, பலதிறப்பட்ட சுவைகள்மலிய, நாடகவியலின் நற்பண்புகள்மிளிர, சொன்னயம் பொருணயம் ததும்பப் பொலிவுறுகின்றது. இதனைத் தமிழன்பர்கள் பல்லாற்றானும் போற்றுங் கடப்பாடுடையார். இதன் விலை ரூ. 1—0—0.

திரிசாரணீயம் :—சாரண இயக்கத்தைத் தோற்றுவித்து, அதனை உலகெங்கும் பரவச்செய்த உத்தமப் பெரியராம் பேடன்பவல் துரைமகனார் ஆங்கிலத்தில் எழுதி உபகரித்த "Rovering to success" வெற்றிதரும் திரிசாரணீயம் எனும் பொருள்படும் அனுபவநூலைத் தழுவி சுருக்கியும் விளக்கியும் இயற்றப்பெற்ற அருமையான தமிழ்நூல். யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதனையே வாழ்க்கையின் குறிக்கோளாகவும் பிற உயிர்கள், அறியாமை, வறுமை, பிணி, மூப்பு இன்ன பலவற்றால் எய்தும் இன்னல்களைக்களைந்து, அவற்றின் நீக்கத்தால் அவை இன்புறக் காண்டலே தமது இன்பப்பேறாக வும், இப்பெற்றித்தாய மக்கள் தொண்டிற்காமாறு தம்மைச் சீலமும் செம்மையுமுடையராய் ஆக்கிக்கொள்ளும் நன்முயற்சியே சாரண இயக்கத்தின் சிறந்த பண்புகளாம். சாரண வியக்கத்தின் பலபிரிவுகளுடன் திரிசாரணீயம் என்பதும்ஒன்று. சாரணராவார் தாம் இருக்குமிடத்தன்றி சென்ற சென்றவிடத் தெல்லாம் தொண்டுபுரியும் பெற்றிமையை விளக்குவது. திரி சாரணீயத் திறனை நன்கு ஆய்ந்து கடைபோக அறிந்து அத் துறையிலே உழைத்துவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பௌதிகக் கலைச் சொற்பொழிவாசிரியர் திருவாளர். நவநீத கிருஷ்ணன் அவர்கள் M. A., அங்கிலநூலில் கண்டறிந்த உண்மைகளைத் தமிழ் மக்களும் கற்றுப் பயனடைய வேண்டுமெனும் அவாவினால் இயற்றியதாகும். மனித வாழ்க்கையின் சிறந்த குறிக்கோள், அதனை எய்துதற்கான செந்நெறி, ஒழுகலாறு யாவை எனவும், இந்நெறிக்கண் படர்வோரைத் தகைசெய்யும், சோம்பல், மயக்கம், காமம், அறியாமை, நாத்திகம் ஆகிய இடையூறுகளை மீதூர்தல், திரிசாரணீயத்தின் விதிகள் முதலியவற்றை விளக்கி எளிய நடையில் எழுதப்பெற்றது. தமிழ் மூதறிஞர்கண்ட உண்மைகளைஉலகியல்நெறியில்வைத்துப்புதிய முறையில் அறிவுறுத்துவது. தமிழுலகிற்கு நல்விருந்தாவது. மாணவர் முதியோர், செல்வர், வறியோர் ஆடவர் பெண்டிர் ஆகிய தமிழ்மக்கள் யாவரும் இந்நூலை நன்றியுடன் வரவேற்றுப் போற்றும் கடப்பாடுடையர். இதன் விலை காகித அட்டை அணா 12. துணி அட்டை ரூ. 1—0—0.